KALANILAYAM

தனிப்பிரதி விலை அணா மூன்று.

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 6] 1933 ஹு ஏப்ரல் மீ 27உ [No. 17

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 321
2. தேவகி (ஓர் நாவல்)
K. இராஜகோபாலன் 323
3. தமிழ்நாட்டு இராஜ இரத்தினங்கள்
N. R. சேஷாசாரி 325
4. வாலிவதை (ஓர் ஆராய்ச்சி)
V. V. ஸ்ரீநிவாசாச்சாரியார் B.A.B.L. 326
5. யாப்பிலக்கணம் (செய்யுள்-கலிப்பா)
வித்துவான் M. V. வேணுகோபாலப் பிள்ளை 327
6. தமிழ்ப் பாடம்
(நளவெண்பா - கலிநீங்கு காண்டம்) 329
7. பொதிகை நிகண்டு (ச, சா)
S. வையாபுரிப் பிள்ளை B.A.B.L. 331
8. நம்மாழ்வார் வைபவம் (4-ம் பத்து, 10-ம் தசகம்)
K. இராஜகோபாலாச்சாரியார் B.A.B.L. 332
9. கம்பராமாயணம் (மாரீசன் வதைப்படலம்)
T. N. சேஷாசலம், B.A., B.L. 334
10. நவாலி அட்டகிரி அக்கரமாலை
நவாலி, கா. சோமசுந்தரம் பிள்ளை 335
11. வர்த்தமானம் 339

கலாநிலயம்

189175

சமயச் சாந்தி 2.

சென்றவாரம் எடுத்துவரைந்த ரோஸ்ஸுப என்பவர் தம் வாக்கியங்களில் அமைந்துள்ள கருத்தை இதன்கீழ்த் தருகின்றோம்:—

* * *

“ஏன் எனது ஆன்மா உடலினால் தளையுண்டு கிடக்கின்றது? ஏன் எனது ஆன்மா இந்திரியங்களின் ஆட்சிக்கு உட்பட்டிருக்கின்றது? பல்வகைத் தளைகளினால் ஆன்மாவின் தூய நோக்கங்கள் தோற்கடிக்கப் பெறுகின்றனவன்றோ? இவ்வினாக்களுக்குவிடை எனக்குத் தெரியாது. எல்லாம்வல்ல இறைவனுடைய மந்திராலோசனைச் சபையில் எனக்கு இடமில்லை. ஆயினும், கடவுளின் சித்தம்இவ்வண்ணம் இருக்கலாமோ என்று நான் ஒருவாறு ஊகிக்கலாம். இயற்கையிலே தூயநிலையே எங்கும் நிலைத்திருக்க ஆன்மாவானது, ஆசாபாசங்களால் பீடிக்கப்படாமல் சுத்தமாயிருக்குமாயின் பின், ஒருவன் அன்பும் அறனும் உடையவனாயிருக்கின்றான் என்பதில் அவனுக்கு என்னசிறப்பு இருக்கின்றது. அப்போது, உள்ளத்திலிருக்கின்ற மனச்சாட்சியின்படி நடந்துகொள்ளும் ஞாபகத்தாலும், நெஞ்சத்து நல்லன் நான் என்னும் பெருமிதத்தாலும் விளைகின்றவோர் தனிப்பேருவகையின் சிகரத்தை ஒருவன் எய்த முடியுமா? நேரியநிலை உலகத்தில் இயற்கையிலேயே அமைந்திருக்குமாயின், எவ்விதக் கஷ்டமு மில்லாமல் ஒருவன் ஆன்மவாழ்வு நடத்துதல் இயல்வதாகும். அப்பொழுது ஒருவன் தேவதைகளைப்போ லிருக்கலாம், எனினும் எவ்வகை இடர்களுக்கிடையேயும் செம்மையுடன் இருக்கும் ஒருவனே தேவதைகளினும் பலமடங்கு சிறந்தவனாவான். லோகாயதத் தளைகள் மனிதனைத் தன்னலத்தைக் கோருமாறு செய்கின்றன. சுயநல எண்ணங்கள் ஆன்மாவைத்தன் வழியிழுக்கின்றன. பொதுநலத்திற்குத்தன்னலம் விரோதமாவதால் தன்நலத்திற்குரியதே மனிதனால் தேட நேர்கின்றது. இத்தகைய நிலையிலே எவன் ஒருவன் தனது அறிவினால் நேரியவழி நடக்கின்றானோ அவனே புகழுக்கும் பெருமைக்கும் தகுதியுடையவன். உலோகாயதத்தளைகளை வென்று கடவுளின் சங்கற்பத்தின்படி எவன் நடக்கின்றானோ அவனுக்குத்தான் முடிவில்லா ஆனந்தம் உரியதாகின்றது.

“இவ்வுலகில் மனிதன் தாழ்மையான நிலையிற்றான் இருக்கின்றான். எனினும் மனிதனது உள்ளத்தின் முதற் றூண்டல்கள் நன்மைக்குரிய வழியையேகாட்டும். எனவே தீமையெல்லாம், அத்தூண்டலுக்கு விரோதமாய் நாமாகத் தேடிக்கொள்பவைகளே. அப்படியிருக்கத் தீயவை தந்தனனென்று கடவுள்மீது பழிசாற்றுவானேன். மனிதனைக் கெடுக்காமல் அவனை நாம் இயற்கையாய் விடுவோமாயின் அவன் நல்லவனாகவும் சந்தோஷமுள்ளவனாகவுமே யிருப்பான். ‘குற்றம் செய்யும் நிலைமைக்கு நான் வற்புறுத்தப்பட்டேன்,’ என்று ஒரு தீயோன் சொல்வானாயின், அவனது கூற்றுப் பொய். இந்திரியங்கள் இழுக்கும்வழிக்கு இரையாகாதபடி தன்னை யடக்கி ஆண்டுகொள்ளாமல், அவைகளின் வயமாயபின்னர் வருந்துவதிற் பயனென்ன? இந்திரியங்களின் அடிமைகளாய் உழலுங்கால் விஷயங்களைத் தவறான முறையில் மதிப்பிடலாகின்றோம்.

3L
1933 (4)

"என்னை நான் உயர்த்திக்கொள்ளவும், மனோதிடத்துடனும், சந்தோஷத்துடனும் ஆசாபாசங்களின் வயமாகாமல் நான் இருக்கவும், நான் தியானம் முதலிய பயிற்சிகளைச் செய்கின்றேன். படைப்பினைப்பற்றிக் கருதுகின்றேன். எனினும், அதனை ஆராய முயல்வதில்லை. படைப்பினைப் போற்றுகின்றேன், படைப்பின் முதல்வனை வழிபடுகின்றேன். அவனது தெய்வ தத்துவத்தில் என்னை மூழ்க்குகின்றேன் ; அவனது கருணைவெள்ளத்தால் என்னை யவன் நிறைத்துவிட்டான். அவனது கருணைக்கு அவனை நான் வாழ்த்துகின்றேன். ஆனால் அவனுக்குப் பிரார்த்தனை ஒன்றும் நான் செய்வதில்லை.

"அவனிடமிருந்து ஒன்றினைப் பெறுவதற்கன்றோ பிரார்த்தனைகள்செய்யவேண்டும். அவனிடமிருந்துபெறுவதற்கு எனக்கு என்னவிருக்கின்றது. எனக்காக அவன், இருக்கின்ற நிலையினை மாற்றி, அதிசயச் செயல்களைப் புரியவேண்டுமோ ? அவனது அறிவினில் பிறந்து, அவனது இச்சையில் நிலவுகின்ற முறையை நேசித்திருக்க வேண்டியவனே நான். அதை விடுத்திருப்பதை என்பொருட்டு அவன் மாற்றிவைக்க வேண்டுமென விரும்பலாமா? அத்தகைய பிரார்த்தனை தண்டிக்கப்படுவதற்குரியதே. நேரியவழியில்நான் நடக்குமாறு செய்வாய் என்றுகூட நான் அவனைக் கேட்கவேண்டியதில்லை. நல்வழியில் நடக்கவேண்டிய சித்தத்தை முன்னரே அவன் எனக்கு அளித்திருக்கின்றான். அறத்தின்பால் அன்பின்பால் நான் ஆர்வம் கொள்வதற்கு அவன் எனக்கு மனச்சாட்சியை அளித்திருக்கின்றான். மனச்சாட்சியின் முறையைத் தெரிந்துகொள்ள எனக்கு அவன் அறிவைக் கொடுத்திருக்கின்றான். நேரியவழியில் நான் நடந்துகொள்ள எனக்குச் சுதந்திரமும் இருக்கின்றது. அப்படியிருக்க நான் தீமையே புரிவேனாயின் அதற்கு மன்னிப்பேகிடையாது. நானாகவேதான் தீமையைச்செய்கின்றேன். "என்னை நீ நல்ல வழியில் நடத்து" என்று நான் கடவுளைக்கேட்டல், அவன் எதைச் செய்யும்படி என்னை எதிர்பார்க்கின்றானோ அதையே அவனிடமிருந்து நான் எதிர்பார்ப்பதாகும். "நீதிக்கும் உண்மைக்கும் கருணைக்கும் மூலமான கடவுளே, உன்னிடம் எனக்கு நம்பிக்கையுண்டு, எனது நெஞ்சத்தின் விருப்பமெல்லாம், உன் சித்தம் நடப்பதாகுக என்பதே. எனது இச்சையை உனது சித்தமுடன் பொருத்தியிருக்கின்றேனாதலின், நீ எதைச் செய்கின்றாயோ அதையே நானும் செய்கின்றேன். உனது நன்மையில் எனக்கும் பங்குண்டு. தெய்வப் பெருமிதத்தை முன்னரே நான் அனுபவிப்பதாக நம்புகின்றேன். அதுதான் நன்மையின் வெகுமதி.

"நான் வழிதப்பிப் போவேனேயானால் அப்பொழுது என்னைத்தடுத்து நீநேரியவழியில்செலுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன். ஏனெனின் மனிதன் தவறக்கூடும். நான் நேரியதென்று நினைப்பது தவறாயிருக்கலாம். எனவே கெட்டதை நேர்மையது என்று என்னை மயங்கவைக்கும் மாயயை விலக்கி உண்மையே என்னைத் தன்பால் அழைத்துக்கொள்ளுமாறு கேட்கின்றேன். என்னால் உண்மையை எய்த முடியாத காலத்து, உண்மையின் கடமை என்னை வந்து எய்த வேண்டுமென்பதாகின்றதன்றோ!

"இயற்கையின் பெருவனப்பைப் பார். உள்ளத்திருந்து எழும் ஓசைக்குச் செவிகொடுப்பாய். கண்ணிற்கும், மனச்சாட்சிக்கும், புத்திக்கும் எட்டும்படி கடவுள் பேசுகின்றானல்லவா ? இன்னதற்குமேல் மனிதன் நமக்கு என்ன செய்யக்கூடும், சொல்லக் கூடும் ? மனிதன் கூறுகின்றதெல்லாம் கடவுளை இழித்துவைப்பதேயாகும். மனிதனால் கூறப்படும் மதக்கோட்பாடுகளில் ஒன்றும் கடவுளின் தத்துவத்தை விளக்குவதாகாது. நம்மை அவை குழப்பியே வைப்பதன்றி உயர்த்துவ தென்பதோ ஒருபோதுமில்லை. மனிதனால்வகுக்கப்பட்ட மதக்கோட்பாடுகள், மனிதனைச் செருக்குடையவனாகவும் கொடியவனாகவும், பிடிவாதக்காரனாகவும் செய்து, உலகத்தின் அமைதிக்குமாறாக நெருப்பையும் கத்தியையும் எங்கும் நிலவச்செய்கின்றன. இன்னவைகளால் பயனொன்றுமில்லை; மற்று, குற்றத்தையே அவை வளர்க்கின்றன, துக்கத்தையே பெருக்குகின்றன.

"கடவுளை எப்படி வழிபடுவது என்பதை மனிதன் அறிவதற்கு மதமுறைகள் தேவை என்று கூறுகின்றார்கள். ஒவ்வொரு நாட்டினரும் கடவுளைத் தங்கள் இஷ்டப்படி செய்துகொள்ளத்தொடங்கியதும், தங்கள் மனதிற்கு இசைந்தபடி அக்கடவுளைப்பேசச்செய்துவிட்டனர். இதற்குமாறாக, அவரவர் ஹிருதயத்தில் கடவுள் என்ன சொல்கின்றார் என்பதை மாத்திரம் மனிதர் செவிகொடுத்துக்கேட்டிருப்பாராயின், உலகத்தில் ஒரே மதந்தான் இருந்திருக்கும்.

* * *

இத்தகைய உறுதி மொழிகளே நம்மனோர் உணர்விற்கு ஊன்றுகோல்களாதல்வேண்டும். அல்லலுற்றலையும் மனத்திற்குச் சமய நெறிகளில் சாந்திதேடுதல் தக்கதே. ஈசுவரனுடைய சித்தத்தில் நம்பிக்கை வைப்பதே சமயத்தின் இலக்கணம் என்பது உண்மையாயின், அச்சித்தம் யாதென்று அறியவேணும், அல்லது, அது அறியமாட்டாததென்றுணரவேணும், வேறுவேறு பேசி வாதங்கள் செய்வானேன். அவரவர் உள்ளத்திற் சான்றாகநின்று உரைக்கின்ற கடவுளின் மொழிகளைமாத்திரம் மக்கள் கேட்டு நடப்பார்களாயின் உலகமனைத்தும் ஒரு மதந்தானே இருக்குமென்று ரோஸ்ஸோ வகுப்பதன் வாய்மையை உணர்வதல்லால் சமயமும் இல்லை, சாந்திக்கு வேறு வழியுமில்லை.

பொய்வளரும் நெஞ்சினர்கள் காணாத காட்சியே கடவுள் என்பது மெய். ஆயினும், அப்பொய்யினர் நெஞ்சினுள்ளும் அக்கருணைவள்ளல் நாடாமல்இருப்பதில்லை. மெய்யரேபோல் பொய்யர் உள்ளத்திலும் அக்கடவுள் என்றும் நின்று ஏற்றன எடுத்து இயம்பியவண்ணமாகவே இருக்கின்றான். பொய்யராய்ப் புகுந்தபேரும் ஒருநாளல்லாக்கால் ஒருநாள் அச்சொற்களைக்கேட்டுத் திருந்தினவர்களாய் அமைதியடைவார். மற்று அதற்கு இடையூறாய் நிற்பவர்கள், "நஞ்சமயம் நஞ்சமயம்" எனக் கழறிக்கழறி நாத்தழும்பேறியவர்களே. இன்னவர்களிலும் நாத்திகம் பேசுகின்றவர்களே நனிநல்லர் என்னக் கருதவேண்டிவருகின்றது. இவர், " கடவுள் உன் நெஞ்சிலிருந்து சொல்வதைக் கேட்காதே" என்ற எல்லையில் தம் புல்லிய உரைகளை நிறுத்திக்கொள்கின்றனர். மற்று, சமயவாதிகளோ, "என்னுரையையே கேள், கேள்" என்று வற்புறுத்துபவராகின்றார். இதனால் மக்கள் கருத்தில் குழப்பம் அதிகமாகின்றது. வெல்லாமலெவரையும் மருட்டிவிடும் வகைதந்த வித்தையுடைய இன்னவர்தம் வாய்பார்த்திருக்கும் மக்கள், மதமயக்கங் கொண்டவர்களாய் ஈசுவரனுடைய சித்தத்தைவிட்டு எத்தனை தூரம் விலகலாமோ அத்தனை தூரம் அகன்று அல்லலுக்கே ஆன்மாக்களை ஆளாக்குவதன்றி வேறென் செய்யவல்லவர்களாவார்.

தேவகி

அத்தியாயம் 10

[309-வது பக்கத் தொடர்ச்சி]

"ஐயா, மேலே செல்லாதே யென்றால் கேளாமல் செல்கின்றாய். உன்னப்பன் தேடிவைத்த வீடென்று இதை நினைத்தாயோ ?" என்றான் ஒரு வேலையாளன்.

"வெள்ளைத் துணியைக் காவியில் தோய்த்துக் கட்டிக்கொண்டு தாடியையும் வளர்த்துக்கொண்டுவிட்டால் எங்கும் நுழைவதற்கு உரிமை வந்துவிடும் போலும்" என்றான் மற்றொரு வேலையாளன்.

"ஐயா, சாமியாரே, இது ஆண்டி மடமன்று. உன்னைப்போல் பல சாமியாரை நான் பார்த்திருக்கிறேன். கேட்பதற்குப் பதில் சொல், நீயார் ?" என்று வேறொருவன் கேட்டான்.

இந்நேரம் இவ்வேலையாளர்களை உற்று நோக்கிக் கொண்டிருந்த பெரியவர், புன்சிரிப்பொன்று போக்கினராய் "இது ஆண்டி மடமன்று' என்பது தெரிந்துதான் வந்துளேன்", என்றார்.

"நீ யாவன், இங்குனக்கு என்னவேலை. இக்காஷாயம் தீயவர்க்குரிய வேஷமாய் அமைந்துளது" என்றான் மீண்டும் ஒருவன்.

"அப்புனே, இங்கு வேலையும் உளது. உனக்குக் கண்ணுண்டாயின் என்னை யாவனெனத் தெரிந்துகொண்டிருப்பாய். இங்கென்னவேலையென்று கேட்கின்றாய். சொல்கின்றேன் கேள். கொடுப்பது என்பதை மாந்தர் அறவே மறந்துவரும் இந்நாளில் எம்போன்றார் இருப்பதால்தான் மனமில்லாமற் போனாலும் பெருமைக்காகவாவது கொடுக்க நேர்கின்றது. கொடைத்தொழில் காக்கும் மரபுடையோம் யாம்." என்றாரவர்.

"அடே, அப்பா, என்ன பேச்சடா பேசுகின்றான். காவியுடைக்குச் சக்தி அதிகமுளது போலும்." என்றான் ஒருவன்.

"எனக்கு நீ கண்வயித்தியம் செய்யவேண்டா இம்மனையுளோர் ஈகைக்குணத்தையும் நீவளர்த்துவைக்க வேண்டா. நீ உள்ளே போகலாகாது; கொடுத்தவர் கண்டது போதும். இது சோம்பேறி மடமுமன்று." என மறித்தான் மற்றொருவன்.

"என்னைத் தடுப்பதற்கு யாராலும் இயலாது. இது என் வீடில்லையாயின் சோம்பேறி மடம் அன்றென்பதும் எனக்குத் தெரியும். எம்போன்றவர்க்கு வீடும் வேண்டா, வாயிலும்வேண்டா. இரந்து வருவோரையிடைமறித் தகற்றத்தான் உங்கள் தலைவன் கற்பித்தானோ. நன்று, நன்று, நீங்கள் ஏவல்புரியும் விதம்." என்று சில பேசிக்கொண்டே வழிவிலக்கி மாளிகையின் வாயிற்படி வந்துசேர்ந்தார். மீண்டும் வேலையாளர் அவரைத் தடுத்தனர். தம்மைப் பற்றி யிழுத்த கைகளைஉதறிஅகற்றிவிட்டு, "அற்பர்காள், என்மெய் தீண்டாதீர். என்னை உங்களால் தடுக்க முடியாது. விரும்பிய வீடு சென்று இரந்துபெறுகின்ற உரிமையெனக்குண்டு. ஏனடா நகைக்கின்றாய், மற்போரும் புரிவேன், வாட்போரும் பயின்றுள்ளேன்' என்று கம்பீரமான தொனியிலே கூறினார். வேலையாளரும் திகைத்துவிட்டனர். வந்தவர் குரல் என் காது கேட்டுப் பழகியுள்ள ஒரு குரலாயிருந்தது. எனக்கு ஒன்றும் விளங்கவில்லை. சண்டை யெங்கு முற்றுகின்றதோவென, அஞ்சி, அன்னையாரிடம் ஓடி வெளியில் நிகழ்வது கூறினேன். அன்னையாரைக் கண்டதும் அப்பெரியவர், தாழ்மையுடன் வணங்கி, "அன்னையீர், உங்கள் திருமனைபைக்காத்திருக்கும் இப்புன்மையோர், பசியின் கொடுமையை ஆற்றிக்கொள்ளலாமெனவரும் என்னைத் தடுக்கின்றனர். வேறொன்றுமில்லை. என் பசியைத் தீர்த்தருள்வீர்" என்னலும், அன்னையார் அவரை உள்ளழைத்தேகினார். அன்னையார்ஏதோ கேட்கத் துவக்க, வந்தபெரியார், "பெருந்தகையீர், பின்னர்ப் பேசுகின்றேன். பசியின் கொடுமை யதிகம். உண்டபின் என் வரலாற்றொடு என் இரேகை நூற் புலமையும் நீங்களறியலாம்." என்று கூறினார். பாலும் பழமும் அளிக்கப்பெற அவைகளை உண்டார். வந்தவர் இரேகை நூல் வல்லுநர் என்பதறிந்ததும் எல்லோரும் அவருக்கு அதிக உபசாரம் செய்ய வாரம்பித்தனர். எம் பொருள்நிலை சிறக்குமா என்பாரும், பட்டங்கள் கிடைக்குமா என்போரும், மக்கட்பேறு பெறுவோமோ என்பாரும், எம்துயர் தீருமோ என்பாருமாய் வந்த விருந்தினர் அனைவரும் அவரைச் சுற்றிக்கொண்டு கைகளை நீட்டினர். "ஐய, என்னை உங்கள் கரங்களால் முற்றுகையிடாதீர்." என்று கூறி, அன்னையாரைநோக்கி "அம்மா, என்னைத் தனியறை யனுப்பி ஒருவர் ஒருவராக வரச் செய்வீர்களேல், சோதிடம் கூறுகின்றேன்." என்னலும், அன்னையாரும், 'ஓம்' என்றார்.

அன்னையார் அனுமதிபெற்றுச் சோதிடரும் தனியறை சென்றார். வந்தவிருந்தினர் பலர் அறையினுட் சென்று, அப்பெரியவரது ஆற்றலைப் புகழ்ந்தவண்ணம் வெளியே வந்தனர். பிறகு பெண்ணகத்தார் அறையினுட்சென்றனர். சென்றவர் சிறிது நேரத்திற்கெல்லாம் உவகையற்றவர்களாய் வாடிய முகத்தோடு திரும்பினர். அவர்கள் முகத்தில் ஈயாடவில்லை. ஏனென்று எனக்கு விளங்கவில்லை; பிறகு அன்னையார் இராணியுடன் உட்சென்றனர். நீண்ட நேரம்வரை உட்சென்றவர் வெளிவரவில்லை. சோதிடர் மாளிகைக்குள் நுழைந்தவிதமும், பின் அவர் கையாளும் முறையையும் நோக்குங்கால், எல்லாம் நாடகந்தானோ என எண்ணினேன். அவரதுபேச்சினில் எனக்குப் பழக்கமுள்ள ஒருதொனி என்னைச் சிந்தனைக்குள் ஆழ்த்தியது. இன்னபடி நான் சிந்தித்தவளாய் அவ்வறையின் வெளிப்புறம் நின்றுகொண்டிருந்தேன்; அவ்வளவில் அன்னையாரும் இராணியும் திரும்பினர். திரும்பிய அன்னையார், "பெண்ணே, தேவகி, இப்பெரியவர் புலமை பெரிது. இவர்திறம் சோதிடக்கலை வல்லாரை இதுவரை நான்கண்டதில்லை. பெண்ணே நீயும்போய்ப் பார்த்துக்கொள்" என்று கூறினார். உள்செல்லஎன்மனம் விழைந்ததெனினும் நாணமோ இடைப்புகுந்து என்னைத் தயங்கச்செய்தது. அன்னையோ, "பெண்ணே, போ, அஞ்சவேண்டா, அவர் கண்ணியமுள்ளவர், துறவி. அவரும் உனது கையைப் பார்க்க வேண்டுமென்றார். போ" என்று பணிக்க, மெல்ல அடிபெயர்த்து உள்ளே சென்றேன்.

நான் உள்ளே சென்றதும், அப்பெரியார் 'பெண்ணே வா' என்று தமது தாடியை உருவிய வண்ணம் வரவேற்றார். சிறிதுநேரம்வரை வெற்றிடம் நோக்குவார்போல் இருந்த அவர், 'கதவைத் தாளிடுவாய்' என்று கூற நானும் தாழாது தாளிட்டேன். ஓராடவனோடு தனியிருக்கும் உணர்ச்சியொன்றும் எனக்கு ஏற்படவில்லை. சட்டென்று என் கரத்தைப்பற்றியிழுத்து இரேகைகளை உற்று நோக்கிக்கொண்டிருந்தார். பின் என் சரிதையைச் சுருக்கமாய்க் கூறினார். நானுற்ற வியப்பினிற்கு அளவேயில்லை. பிறகு அவர், "பெண்ணே, கேட்பதற்கு ஏதாவது இருந்தால் கேட்கலாம்" என்று கூறினார்.

சிறிது தயங்கிய நான் என்னைத் தைரியப்படுத்திக் கொண்டு, 'ஐய, நானிப்பொழுது நினைத்துக்கொண்டிருப்பதை இயலுமேல் கூறுவீர்.' என்று கேட்டேன்.

"என்னைச் சோதிக்கப் புகுந்தனையோ, பெண்ணே, நன்று, இருபது வருடகாலமாக இச்சோதிடத்துறையில் ஈடுபட்டுள்ள எனக்கு இது எளியதே. எத்தனையோ பலர் என்னைச் சோதித்துவிட்டனர். உன் புகழுரைக்கு நான் இங்கு எதிர்பார்த்து நிற்கவில்லை. எனினும் சொல்கின்றேன் கேள். எட்டுவதற்கியலாதவொன்றென்று நீ நினைக்கின்ற ஒன்றை எய்தப் பெறலாமோ என்று ஏங்குகின்றனை. பெண்ணே இது மெய்யன்றோ" என்று அவர் கூறலும் நான் திடுக்குற்றேன். எனது இந்நிலை நோக்கிய அவர், "பெண்ணே, வியககவேண்டா. இது எனக்கொரு பொருளன்று. இன்னும் சொல்கின்றேன் கேள். அவ்வொன்றை நீ எய்தப்பெறுவாய்" என்று ஆழ்ந்த குரலில் கூறினர்.

"குழந்தைகளுக்குப்பெற்றோர் அம்புலியையழைத்துத் தருகின்ற கதையாயிருக்கின்றது உங்கள்கூற்று. நான் குழந்தையல்லள்" என்று என்னையும் அறியாமல் பதில் கூறினேன்.

"பெண்ணே, என் சோதிடம் பொய்த்ததே யில்லை. அம்புலியையும் நீ இதோ கைவரப் பெறுவாய்." என்றவர் கூறிப் பொய்த்தாடியும் புனைவேடமும் போக்கினராய் என்முன் நின்றார். இது கனவோ அல்லது நினைவோ என்று கலங்கினேன். ஒன்றும் புரியாமல் திகைத்து நின்ற என்னை அவர் தம் திருக்கரத்தால் பற்றி, "அணங்கனையாய், அம்புலியும் கிட்டியது, என் சோதிடமும் பலித்தது." என்று புன்னகை பொலியக் கூறினர்.

"அவ்வம்புலிக்குரியஉரோகிணியும், வேறொருத்தி. அவளும் வந்துளாள். இதுவும் நிகழ்கின்ற கபடக் கூத்தில் ஓரங்கமேதானோ, எனக்கு விளங்கவில்லை. என்னை விடுவீர்," என்று கூறி அவர் கை கழன்று வெளியேற முயன்றேன். எனினும் அவர் என்னை மறித்து, 'பெண்ணே, வந்தவள் உரோகிணி அல்லள். இன்றே பெண்ணகத்தார் அகன்றிடுவார். சோதிடன் கூறிய சொற்கள் ஜமீன்தாரிடத்தில் அவர்களுக்குப் பிடிப்பில்லாமற் செய்துவிட்டன. என் பணத்தையும் அந்தஸ்தையும் நச்சி வந்த அவர், ஜமீன்தார் பொருள்நிலை யவர் நினைத்தபடி இருக்கவில்லை என்பதையென் சோதிடத்தால் அறிந்தனர். இனி அவர்கள் பெண்ணுக்குரிய புருஷன் நானல்லன். பெண்மணி, உன்கையிலே கட்டுண்டு கிடக்க விழைகின்றேன். ஏற்பாயோ என்னை.' என்று அவர் ஆர்வமொடு கூறிய மொழிகள் என்னைத் தளிர்க்கச் செய்தன.

"ஐய பெரியோய், நானோ ஏழை, அநாதை. உற்றார் உறவினர் இல்லாதவள். உன் குலத்திற்கும் மரபிற்கும் அபவாதம் ஏற்படுமாறு நான் செய்தல் கூடுமோ. ஊராரும் ஏற்கார், உமதன்னையாரும் விரும்பார்."

"மானனையாய், காதலிற்குக் கண்ணில்லை. உன்னையே விழைகின்றேன். ஒன்றிலும் பற்றில்லா என்னைப் பெண்ணே நீ கவர்ந்துவிட்டாய். பெண்ணே, என் வாழ்வு இனி உன் வாயிலே யிருக்கின்றது......"

"நான் ஏழையும் கடனாளியும் ஆனேன். வஞ்சகர் பலர் சூழ்ந்து என்னை இந்நிலைக்குக் கொணர்ந்தனர். அன்னதற்கு நான் வருந்தவில்லை. இருப்பது எனக்குப்போதும். உன்னை என் துணையாகப் பெற்று, மனிதரற்ற காட்டில் ஒரு குடிசையில் இருந்துகொண்டு வாழ்வதினிலும் சிறந்தவாழ்வு இம்மாநிலத்தில் இருப்பதாகத்தோன்றவில்லை. அகப்படும் காயும் கிழங்கும் சருகும் என் பசிக்குப் போதும். இன்றே என் உடைமையெல்லாம் துறந்திடுவேன்......

"ஏனடி, பெண்ணே, மௌனம் சாதிக்கின்றாய். என் செல்வநிலை உற்றுள மெலிவு கண்டு நீயும் மயங்குகின்றனையோ? என்று அவர் கூறியமொழிகளைக் கேட்ட நான், "ஐய, உடைமையை நான் இன்றுவரை அறியேன். அறியாத ஒன்றில் எனக்குப் பற்று ஏற்படாது. நீங்கள் சொல்வதுயாதெனத் தெரியவில்லை." என்று கூறலும், "சென்ற நான்கு ஆண்டுகளாக நான் எதனிலும் பற்றிலாதிருந்தேன். பொன்னிலும் ஆசையில்லை, பெண்ணையும் நான் விழைந்ததில்லை. வெறுமையில் உழன்றது என் மனம். பெண்ணே, நீ வந்தாய், உன்னைக் கண்டதுமுதல் புதுப்பிறவி பெற்றவன் ஆனேன். வெறுப்பையே நல்கிய இவ்வுலகம் புது எழிலை எனக்கு அளிக்கின்றது. இப்பிரபஞ்சமே நீயாய், நீயும் நானாய்க் காண்கின்றேன்" என்று என்னுள்ளத்தில் ஒளியைச் சொரிந்தார் எம்பெருமான். உடனே மண்தளை யறந்தது. நெடுமால் என எங்கும் பெருகினேன். இந்நிலையில் நானிருக்க, எனதன்பன், "பெண்ணே, மோனம் துறப்பாய். உன்பால் நான் வேண்டுவது ஒன்றுண்டு. உதவுவாயோ வள்ளலே." என்றவர் கூறி என் வாய்பார்க்க, "என் கொற்றவ, ஏழை யென்பால் ஈவதற்கு ஒன்றுளதோ என்றே ஏங்குகின்றேன்." என்று நான் எதிர் உரைத்தேன்.

"திருவனையாய், இல்லாத ஒன்றை நான் விழைய மாட்டேன். இயல்வதொன்றையே இரக்கின்றேன்."

"இயலுமேல் அது உனதே ஐய. இயல்வது கரப்பனோ."

"உன் அதரத்தில் சுரக்கின்ற அமுதத்தை நான் பெற விழைகின்றேன். ஈவாயோ"

நாணமோ என் கன்னிமனம் பற்றத் தலைகுனிந்து தரைகீறி முகம்மறைத்து ஒருசிறை யொதுங்கினின்றேன். என்னிலை கண்ட கோமான், "சொன்ன சொற்பிழைப்பது பெருமையன்று, பெண்மையின் மரபுமன்று. ஆதலால் என் செல்வமே, உன் வாய்மையும், மரபும் காக்கின்றேன்." என்று என்னை யவர் அணையவர, அவர் கைவிலக்கி வெளிச்செல்ல முயன்றேன். அவரோ தடுத்து. "நாணினையோ நங்காய், நாணத்தின்எளிமைதன்னைக்காட்டுகின்றேன்" என்று இனிது கூறி முடிப்பதன்முன் என்னதரம் தேடிவந்த அவர் முகத்தைக் தடுத்து, "வேண்டா, வேண்டா, வேண்டவே வேண்டா" என்று மிகுகின்ற அச்சத்தால் கூறினேன். என் கொற்றவன் சிரிப்பொன்று சிரித்துவிட்டு என்னதரத்தை ஆழ்ந்ததோர் முத்தத்தால் நிறைத்துவிட்டார்.

வேண்டாவென்று என் வாய் விளம்பியதேனும் என்னுள்ளமோ அவர் அளித்தவொன்றை விரும்பியே ஏற்றுக்கொண்டது. மீண்டும் என்னை யவர் வாரியெடுத்து, முத்தத்தால் அலங்கரித்தார். அமயம் வாய்த்ததும் அவர் பிடிவிட்டுக் கழன்று வெளிவந்தேன். என்னைத் தொடர்ந்து, பொய்வேடம் புனைந்தனராய் ஏற்பதுபோல் எனக்கெல்லாம் அளித்தஎன் பெருவள்ளல் ஜயரங்க பூபதியார் வெளியே வந்தார். வந்தவரை அன்னையார்சிலதினங்கள் அங்குத் தங்கிப்போமாறு கேட்டுக்கொண்டார். "ஒரு தினத்திற்குமேல் ஓரூரில் தங்குவது காவியுடை பூண்டார் அறமன்று; எனவே விடை தருவீர்" என்று பதில்மொழிந்து வெளியேறினர்.

அந்தியும்வந்தெய்தியது.ஜயரங்கபூபதியாரும்மனை திரும்பினர். அவர் வந்ததும் பெண்ணகத்தார் விடைபெற்றுத் தமதூர் திரும்பினர். அன்றிரவு இளங்குழந்தையின் மனமற்ற களிப்பினை எனதாகப் பெற்றேன். என் கோமகன் கொண்ட வேடத்தில் அண்டர் நாயகன் என்னை யுய்க்கும் நெறிகண்டு, மட்டிலா மகிழ்ச்சியால் அவரது சேவடி பரவினளாய் இரவின் பெரும்பாகம் கழித்துப் பின் துயில்கொண்டேன்.

தமிழ்நாட்டு இராஜ இரத்தினங்கள்

பண்டைக் காலத்தில் தென்னிந்தியாவானது பல சிறுஇராஜ்யங்களாகப்பிரிக்கப்பட்டுஒவ்வொன்றும் ஒவ்வொரு சிற்றரசனால் ஆளப்பட்டு வந்தது. அன்னார்க்குக் 'குறுநில மன்னர்கள்' என்று பெயர். மற்றைய பல இராஜ்யங்களுள் சேர சோழ பாண்டிய இராஜ்யங்கள் முக்கியமானவை. அம்மூன்றும் நீர்வளநிலவள குடிவளங்களில் சிறப்புற்று விளங்கின.

"படைகுடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு"

என்ற தமிழ் வேதவாக்கின்படி (1) இராஜபக்திபொருந்திய பிரஜா பலம் (2) தங்குதடை யில்லாத் தனதான்யாதி பலம் (3) அரசனது உயிரேபோன்ற நல்லமைச்சுப் பலம் (4) இரதகஜதுரகபதாதிகளென்ற சதுரங்க சேனை பலம் (5) தகர்க்கொணா அழுத்தமான அரண் பலம் (6) ஆபத்திலுதவும் அருஞ்சிநேக பலம், ஆகிய ஷட்பலங்களில் ஒவ்வொருவனும் விஞ்சி விளங்கினன். ஆகவே அம்மூவருக்கும், "முடியுடை மும்மன்னர்" என்ற சிறப்புப் பெயர் ஏற்பட்டது.

உள்ளதைக்கொண்டு உளமுவந்து உலவுவது பாமரஜனங்களின்வாழ்க்கை இலக்ஷணமெனினும், சேனைவிருத்தி தேசாபிவிருத்திகளில் கண்ணுங்கருத்துமாயிருந்துபோராற்றல்புரிவதே க்ஷத்திரியதர்மமாகும். இருப்பதுபோதுமென்று ஒரு இறைவன் மந்தித்துக் கிடப்பின் மாண்புற்ற மறுநாட்டு மன்னன் பெரும் படையுடன் அன்னவனை எதிர்த்துச் சமர்புரிந்து வெற்றிபூண்டு அவன் நாட்டைத் தனதாக்கிக்கொள்ளுவான். ஆகவே எந்த க்ஷத்திரியனும் சோம்பியிருந்து தேம்பித் திரியமாட்டான். இவ்விதம் அடிக்கடி முடியுடை மன்னர்கள் குறுநிலமன்னர்களைத் தாக்கி அவர்களை அடக்கித் தத்தம் புகழைப் பெருக்கி வந்தனர்.

பட்டமும் விவாகமும்

மும்மன்னர்களுக்குள் தந்தைக்குப் பின் தனயன், அவனுக்குப் பின் அவன்மகன் என்றவாறு பரம்பரையாய்ச் சிம்மாசனமேறுவது வழக்கமாயிருந்தது. சந்தான சம்பத்தைப் பெறாமல் ஒரு பார்த்திபன் மரிப்பின் அன்னவன்தேவி ஒரு பிள்ளையை ஸ்வீகாரஞ் செய்துகொண்டு அப் பிள்ளைக்குப் பட்டங்கட்டுவதும் மற்றொரு நியதியா யிருந்தது. அதுவுமன்றி ஒரு நன்னாளில் பட்டத்து யானையை அலங்கரித்து அதன் துதிக்கையில் ஒரு பூமாலையைக் கொடுத்து ஊர்கோலம் வரச்செய்வார்கள். திரளான ஜனக் கூட்டத்தினிடையே அது யார் கழுத்தில் மாலையைப் போடுகின்றதோ அவனை இராஜனாக ஏற்றுக்கொள்ளுவது இன்னொரு முறையாகவும் இருந்துவந்தது. உதாரணமாக, கரிகால்சோழன் இவ்விதம் இராஜபதவியை அடைந்தவனானன். எவ்விதத்திலாயினும் சரி, அரசன் செங்கோல் விடுத்து,

"அல்லல் பட்டு ஆற்றாது அழுதகண்ணீர் அன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை"

என்றவாறு, கொடுங்கோ லோச்சத் துணிவானாயின், பிரஜைகளெல்லாம் ஒன்றுகூடி அப்பாவியைச் சிம்மாசனத்திலிருந்து துரத்தி விடுவதும் சில சமயங்களில் நடந்துளது. எனினும் அவ்விதக் கோன்குடிப் பொறாமை அபூர்வ சம்பவமாகவே யிருந்தது. பெரும்பாலும் குடிகள் மன்னவனையே பிரத்யக்ஷ தெய்வமாகக் கொண்டாடிவந்தனர்.

ஒரு பார்த்திபன் யாரை வேண்டுமாயினும் சரி, எக்குலத்தில் பிறந்தவளாயினும் சரி, குலங் கோத்திரங் கேளாமல் மணந்துகொள்ளலாம். ஒருவன் மற்றொரு மன்னனைத் தோற்கடித்தால் அன்னானுடைய எல்லாப் பாக்கியங்களையும் தான் அடைவதோடு நில்லாமல் அன்னானுடைய மனைவியர்களையும் அடைவான். தோற்றவன் சிறந்த க்ஷத்திரியனாயின் தன் தேவியரை மீட்பதற்காகவாவது திரும்பவும் போர்புரிய முன்வருவான். ஆகவே இழிகுல மகளேயாயினும் மனமொப்பின் மணப்பது, தோற்றவன் தேவியைத் தீண்டுவது, பல கன்னிகைகளைக் கலியாணஞ் செய்துகொள்வது முதலிய நடத்தைகள் மும்மன்னர்களிடத்து இருந்தனவாம்.

பொதுக் குணங்கள்

தவிர, அவர்களுடைய அரும்பெருங்குணங்களைச் சற்றுக் கவனிப்போம். தோட்டிகள் செய்யும் அற்பத்தொழில்முதல் தொண்டைமான் செய்யும் அரும் ஆற்றல் ஈறுகஅனைத்தும் அவர்களுக்குச் சிறுவயதிலிருந்தே கற்பிக்கப்பட்டன. ஸங்கீதம், நாட்டியம், ஓவியக்கலை, தச்சுவேலை, தையல்வேலை, அச்வசாஸ்திரம், ஆநிரைமேய்த்தல், இரதசாரத்யம், யானை யேற்றம், வேட்டையாடுவது, சுயம்பாகவேலை, மல் யுத்தம், தநுர்வேதம், நீந்துதல், அணிவகுத்தல், அஸ்திர

சஸ்திரப் பிரயோகம் முதலிய எல்லா வித்தைகளிலும் அவர்களுக்குப் பயிற்சி யளிக்கப்பட்டது. 'மன்னனு மாசறக் கற்றோனும் சீர்தூக்கின் மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்' என்பார் பெரியோர். எந்தப் புற்றில் எவ்விதப் பாம்பிருக்குமோ யாமறியோம். நமக்கு யாரும் நிகரில்லையென்று அகம்பாவங் கொள்ளுவது பெரும் பிசகு' என்று முவ்வேந்தரும் பயந்து பெரியோரைப் போற்றி வாழ்ந்தனர்.

பொதுவாகக் கூறின், அவர்களுக்கு ஒரே ஒரு கொள்கைதான் உண்டு. அதாவது குடியோம்புதல். அதைப் பூரணமாய்ப் பெறும்பொருட்டு உட்பகை, வெளிப்பகை, உட்திருடு, வெளித்திருடு ஆகிய கஷ்டநஷ்டங்களைக் களைவதில் சற்றும் சலிக்காதிருந்தனர். நாட்டுக்குக் கேட்டை விளைக்கும் காட்டு மிருகங்களை வேட்டையாடிக் கொன்றொழிப்பதும், ரிஷபங்கள், அசுவங்களின் முரட்டுச் சுபாவத்தைச் சாமர்த்தியமாய் அடக்குவதும் நம்தரணியாளர்க்கு ஸர்வ ஸாதாரணமாம். இம்மட்டுமோ?

மாறுவேடம் புனைந்து நாட்டின் நாலா பக்கங்களிலும் இடையனோடு இடையனாய், எளியனோடு எளியனாய், திருடனோடு திருடனாய், போலிச்சந்நியாசியோடு வேடச்சந்நியாசியாய் ஒருவருமறியாவண்ணந் திரிந்து குற்றவாளிகளைக் கையும் பிடியுமாய்ப் பிடித்துத்தண்டித்துவந்தார்கள். கூன், குருடு, செவிடு போன்ற அங்கஹீனர்; வார்த்திபர், வியாதியஸ்தர், அபலைகள் அனையவர்களைக்காணின் வெறுப்பின்றியும்,கர்வமின்றியுந்தக்க உதவிபுரிந்தார்களென்றால் அம்மன்னவர்களின் கொடைக்குணத்தைப் புகழாது என்செய்வது?

முற்கால முடிமன்னரை எளியோரும் எளிதில் தரிசிக்கலாம். இனிமையாய்ப் பிரஜைகளிடம் சம்பாஷிப்பார்கள். பிச்சைக்காரனோ பணக்காரனோ ஹிதோபதேசம் செய்வானாயின் அதை அங்கீகரித்து அதன் படிநடப்பார்கள். அற்ப குற்றமாயினும் முளையிலேயே கிள்ளி எறிந்துவிடுவார்கள். தமக்கென்றுவாழாப் பிறர்க்குரியாளராய்ச் சுயநலம் ஒழித்துப் பிறர்நலம் பேணிப் பேறுபெற்றனர்.

நமது மும்மன்னர்களின் வள்ளற்றன்மையைக் குறித்து வரைவது சிரமமானகாரியமேயாகும். அவர்கள் யார் எதைக் கேட்பினுங் கரவாதளிக்குங் கற்பகத் தரு. இரந்தோர்க்குப் பரிந்து ஈயும் காமதேனு. பிரதிபலன் கருதாது புஷ்கலமாய் வருஷிக்கும் கார்மேகம். ஏழைபங்காளர். உடுக்கை யிழந்தவன் கை போலத் தீனர்களின் இடுக்கண்களையும்நண்பர்.தேஹி என்றோர்க்கு நாஸ்தி யென்று சொல்லத் தெரியாத அறியாமை யொன்றுதான் அவர்களிடம் இருந்தது. இன்னா செய்தார்க்கு அவர் நாண நன்னயம் செய்து விடுவதில் ஒப்புவமை யற்றவர். அஞ்சாமை, ஈகை, ஊக்கம், சுற்றந்தழுவுதல், காலமறிந்து கரும முடிக்கும் ஆற்றல் முதலான அருங்குணங்கள் வாய்ந்தவர். தங்க ளடிவந்து பொருந்தினோர் எவரேயாயினும் தண்ணளி சுரந்து அவர்களை வாழ்விக்கும் வண்மையாளர். அற்பப் பிராணியெனக் கருதப்படும் ஆவின் கன்றை அறியாது கொன்ற தன் ஒரே மகனைக் கொன்று பழி தீர்த்தான் மனுச்சோழன். அந்தணன் மனைவியை அனுதினமும் காத்துக் கொடுக்கும் அருஞ்செயல் நிமித்தம் தன் கரத்தையு மிழந்தான் பொற்கைப் பாண்டியன். அரசனது அரண்மனையே அறச்சாலை; அரசவையே தர்மஸ்தலம். இப்படி அவ்வள்ளல்களின் தர்ம காரியங்களை விவரிக்கப்புகின் ஏடு பெருகும். சுருங்கச் சொல்லின், முப்பத்திரண்டு தர்மங்களையும் முறைபிறழாமல் நடத்தி நாட்டு மக்களுக்கு அண்டரறியா வானந்தத்தை யளித்தனர்.

அரசர்கள் மட்டுமோ? இல்லையில்லை. அரசியாரும் அமைச்சர்களுங்கூட அரசுக்கு அனுகுணமாய்த் தர்மஸ்வரூபிகளாய் விளங்கிவந்தனர். இராஜராஜ சோழன் மனைவி திரைலோக்கிய மாதேவியின் ஒப்பற்ற உயர்குணங்களையும், இறைபணி புரியும் பேற்றையும் நிரூபிக்கின்ற ஆலயங்களை இன்றைக்கும் லோகமாதேவீச்சரம் அல்லது தக்ஷிண பாஞ்சால மென்னும் திவ்விய க்ஷேத்திரத்தில் பிரத்தியக்ஷமாய்க் காணலாம். இவ்விதம் இராணியர்களின் தலைசிறந்த குணங்களைக்காட்டப் பல சான்றுகளுள. அரசனெவ்வழி அவ்வழி குடிகளே என்பதற் கமைய குடிமக்களும், குறுநில மன்னரும், தெய்வபக்தி, இராஜபக்தி, தேசபக்திகளில் சிறப்புற்று விளங்கினர்.

(தொடரும்)

வாலி வதை

[252-வது பக்கத் தொடர்ச்சி]

வாலிவதையைப் பற்றிய ஆராய்ச்சியில் சில சந்தேகங்களையும் ஆக்ஷேபணைகளையும் கண்டு இரண்டொரு வித்வான்கள் சிறியேனுக்கு எழுதியுள்ளார்கள். அவை பின்வருமாறு:—

1. வாலி வதார்ஹன் என்று வைத்துக்கொண்டாலும் அவ்வதையை இராமன் நிறைவேற்றிய பாகம் ஆக்ஷேபிக்கத் தகாததாய் இருத்தல் வேண்டுமன்றோ? மறைந்து நின்று வாலிக்குத் தெரியாமல் வஞ்சனையாய்ப் பாணப்பிரயோகஞ் செய்தது இராமனுக்குக் கௌரவமாகுமா? வாலி வதார்ஹன் ஆதலின் இராகவன் தன் வீரத்தன்மையைக் கவனியாது மறைந்து நின்று கொன்றான் என்று இதற்குப் பதில் கூறுவது சரியான உத்தரமாகாது. சமாதானம் கூற முடியாத தன்மையை ஒப்புக்கொள்வதேயாம். (Begging the question and not answering it.)

2. வாலிக்குச் சமானமான பாபியாம் இராவணனும் யுத்தகளத்திலேயே இராமனால் கொல்லப்பட்டான். இவனை யேன் வாலிக்கொப்பந்தம் "ஆத்தாயி"யாக வைத்து ஸ்ரீ இராகவனும் மறைந்து நின்று கொன்றிருக்கக்கூடாது? இக்கேள்வி கேட்டுக்கொண்டு தாங்கள் "ஸ்ரீ இராகவனுக்குள் அடங்காத பல காரணங்களினால் இராவணனுடன் உயுத்தம் நேர்ந்தது என்றும், இவனை இராஜ்யத்தினின்றும் சதுரங்க சைன்யங்களினின்றும் தனியாய்ப் பிரித்துக் கொல்வதற்கு சௌகரியம் வாய்த்திலது என்றும், அவ்விதம் வாய்த்திருந்தால் பிராட்டியைக் களவிற் கொண்டுபோன ஒரே காரணத்திற்காக அவனையும் "outlaw" ஆகவைத்துப் பெருமாளும் வாலிக்கொப்பந்தம் கொன்றிருத்தல் கூடுமென்றும் நீங்கள் கூறுகிறீர். அப்படியானால் முதனாள் உயுத்தத்தில்அவ்விராவணன் தனியாய் அகப்பட்ட சமயம் ஏன் இவனை இராமன் கொல்லவில்லை?

3. கொலைத்தண்டனையை நிறைவேற்றியது எத்தன்மையதாயினும் அத்தண்டனை விதித்ததீர்ப்பு,சட்டசம்மதமா யிருத்தல் வேண்டுமன்றோ? இராமன் வாலிக்குச் சொன்ன காரணங்களையே தாங்கள் எடுத்துக் காட்டுகிறீர்கள்? ஆனால் அவைகள் சரியா, ஒன்றிற்கொன்று பொருத்தமா, என்பதை நாம் பார்க்க வேண்டாமா? மனிதர்களுக்குரிய தர்ம சாஸ்திரங்கள் வாலிக்குப் பொருந்துமாயின் அவனைக் கொலைக்குத் தீர்ப்புச்செய்தல் சரியே! ஆனால் வாலியோ "நான் மிருகம்" என்றான். அதற்கு ஸ்ரீ இராகவனும்,

"பொறியின் யாக்கையதோ புலனோக்கிய
வறிவின் மேலதன்றோ வறத்தாறுதான்"

என்று பதில் கூறினான். அவ்விதம் கூறிய கக்ஷியும் ஒருவாறு தக்க சமாதானம் என்று முதலில் தோன்றினும் இராமன் வாலியை மனிதனாகப் பாவித்தானா, விலங்காகப் பாவித்தானா? என்ற கேள்வி இங்கே ஏற்படுகின்றது. "விலங்காகப் பாவித்தன்றோ என்னை நீ மறைந்து நின்று கொன்றாய்" என்று வாலியே சொல்கிறான். அப்பாடலைத் தாங்கள் "இடைச்செருகல்" என்கிறீர்கள். அது எப்படியு மிருக்கட்டும். ஆனால் இந்தச் சம்பவத்திற்குச் சற்று முன்னர்,இளையபெருமாள் இந்நிகழ்ச்சியில் ஜுகுப்சை கொண்டு வார்த்தையாடின சமயம் பெருமாள் தானே,

"பித்தாய விலங்கி னொழுக்கினைப்பேசலாமோ"

என்று கூறினாரே. வாலி சம்பந்தமான வியவஹாரங்களில் இராமன் இலக்குவனிடம் அவனை விலங்கு என்றான் ஒரு சமயம். வாலியிடம் 'நீ மனிதன்' என்றான் மற்றோர் தரம். இரண்டும் ஒன்றிற்கொன்று விருத்தமாயிருப்பதால் ஒன்று நிச்சயமாய்ப் பொய்யாய் இருத்தல்வேண்டும். இது விபரங்களுக்குத் தாங்கள் சமாதானம் எழுதவில்லையே. ஒருக்கால் வாலியை மிருகமாக வைத்து வேட்டையாடினேன் என்றும் மற்றொருக்கால் இவனை மனிதனாகப் பாவித்துக் கொன்றேன் என்றுங் கூறுதல் இராமனுக்குத் தகாதே. இதைச் சட்டத்தில் தேர்ந்தோர் 'Estoppel' என்று கூறுவார்களே. இலக்குவனிடம் இராமன் வார்த்தையாடின விபரம் வாலி கேளாமலிருந்தும் இயற்கை யறிவினாலேயே அதை யுணர்ந்து சம்பாதித்திருத்தல் கூடுமென்று ஏற்படுகிறது.

4. வாலி, மறைந்துநின்றெய்ததை மறித்தும் மறித்தும் குற்றத்தின்பாற்படுத்திக் கூறவும் பெருமாள் அதற்குச் சமாதானம் சொல்லாமலே நிற்கின்றாரே! இதைத் தாங்களும் எடுத்துக் காட்டியிருக்கிறீர்கள். ஆகவே வாலிகேள்வியாக'அவ்வுரை யமையக்கேட்ட' என்ற பாடலும் மிகவும்பொருத்தமாயிருக்கின்றதன்றோ! பெருமாள் மறைந்துநின்றெய்ததற்குச் சமாதானம் காட்டாது நிற்கவும் இவனை இந்தச்சமயம் கைவிடலாகாது என்று கருதி இளையபெருமாளும் தன் கொள்கை எவ்விதமிருப்பினும், தாங்கள் காட்டிய வண்ணம் உய்த்துணர்ந்துழி சரியான காரணங்கள் என்று சொல்ல இயலாத விதமாய் 'முன்புநின் தம்பி சரண்புக' என்ற பாசுரமிட்டு ஒருதிசையாகச்சமாதானம் கூறி முடித்தாராதல் வேண்டும். இதுவும் ஒரே விஷயத்தைத்தான் உணர்த்துகிறது. எவ்வளவு அறிவுபடைத்து நின்றாலும் ஸ்ரீராகவனது கிருத்யத்தைப் பாதுகாத்தல் அசாத்தியமாம். இதையே கல்வியிற் பெரியார் தனது உயரிய நாடகத்தில் புனைந்து காட்டியுள்ளார். "தான் செய்துவிட்ட செய்கையை மறைக்க இயலாது இருதலைக் கொள்ளி யெறும்புபோலலைந்தவாங்கே வாலியின் வாதத்தில் இராமனே தோற்றனன் என்பதற் கையமில்லை. அவ்வா றிவன் தோற்க வேண்டுமென்பதே கம்பரது உட்கருத்து. அத்தோல்வியிலேயே இராமனது தனிப்பெரும் மேன்மையை நிலைநாட்டக் கருதி யிருக்கின்றனர்," என்பர்.

5. இளைய பெருமாள் உத்தரமாக அமைந்தபாடல் இடைச்செருகலாகும் என்று நான் கொண்ட கக்ஷி தமக்கு உடன்பாடன்று என்றும், அதன் பாவம் சரணாகதி தர்மத்திற்குப் பொருத்தமாகவே யிருப்பதாகவும் "ஒருவன் செய்த சரணாகதி யழியும்வண்ணம் வேறொருவன் சரணம்புகுதல் பொருந்ாதென்பது விபீஷண சரணாகதியிற் றெளிந்ததேயாம்" என்றும் மற்றொரு வித்வான் மிகுந்த கருணையுடன் எழுதியுள்ளார். இவைகளைப்பராமர்சித்துச் சமாதானம் கூறவேண்டியது அவசியமா யிருக்கின்றது.

(தொடரும்)

யாப்பிலக்கணம்

[315-வது பக்கத் தொடர்ச்சி]

செய்யுள்—கலிப்பா

முன்னிதழில் வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவுக்குரிய இலக்கணத்தைக் கற்றோம்; இவ்விதழில் நிறுத்த முறையே தரவு கோச்சகக் கலிப்பா, தரவிணைக் கோச்சகக் கலிப்பா, சிஃறாழிசைக் கோச்சகக் கலிப்பா என்பவற்றின் இலக்கணத்தைக் கற்போம்: (சில் + தாழிசை = சிஃறாழிசை)

4. தரவு கோச்சகக் கலிப்பா:— முதலில் நான்கடித் தரவு பெற்றுப் பின்னர்த் தனிச் சொல்லும் சுரிதகமும் பெற்று முடிவதும், தனிச் சொல்லும் சுரிதகமும் பெறாது தரவு மட்டும் தனித்து நடைபெறுவதும் தரவு கொச்சகக் கலிப்பாஎனப்படும்.

(a) தரவு கோச்சகக் கலிப்பா

சேல்வப்போர்க் கதக்கண்ணன்
செயிர்த்தெறிந்த சினவாழி
முல்லைத்தார் மறமன்னர்
முடித்தலையை முருக்கிப்போய்
எல்லைநீர் வியன்கொண்மூ
இடைநுழையும் மதியம்போல்
மல்லலோங் கெழில்யானை
மருமம்பாய்ந் தொளித்ததே.

[இது தனிச்சொல்லும் சுரிதகமும் பெறாதுவந்த தரவு கொச்சகக் கலிப்பா]

(b) தரவு கோச்சகக் கலிப்பா

(தரவு)

குடநிலைத் தண்புறவிற்
கோவலர் எடுத்தார்ப்பத்
தடநிலைப் பெருந்தொழுவில்
தகையேறு மரம்பாய்ந்து
வீங்குமணிக் கயிறொரீஇத்
தாங்குவனத் தேறப்போய்க்
கலையினொடு முயலிரியக்
கடிமுல்லை முறுவலிப்ப

(தனிச்சொல்)

எனவாங்கு,

(சுரிதகம்)

ஆனொடு புல்லிப் பெரும்புதன் முனையும்
கானுடைத் தவர்தேர் சென்ற வாறே.

[இது தனிச்சொல்லும் சுரிதகமும் பெற்று வந்த தரவு கொச்சகக் கலிப்பா.]

5. **தரவிணைக் கோச்சகக் கலிப்பா:**—முதலில் ஒரு தரவும், அதன் பின்னர் ஒரு தனிச்சொல்லும், மீண்டும் ஒரு தரவும், அதன் பின்னர் மற்றொரு தனிச்சொல்லும், ஒரு சுரிதகமும் பெற்று முடிவது **தரவிணைக் கோச்சகக் கலிப்பா** என வழங்கப்படும்.

தரவிணைக் கோச்சகக் கலிப்பா

(தரவு)

வடிவுடை நெடுமுடி வானவர்க்கும் வெலற்கரிய
கடிபடு நறும்பைந்தார்க் காவலர்க்குங் காவலனும்
கொடிபடு மணிமாடக் கூடலார் கோமானே.

(தனிச் சொல்)

எனவாங்கு,

(தரவு)

துணைவளைத்தோள் இவள்மெலியத்
தொன்னலம் துறப்புண்டாங்
கிணைமலர்த்தார் அருளுமேல்
இதுவிதற்கோர் மாறென்று
துணைமலர்த் தடங்கண்ணார்
துணையாகக் கருதாரே.

(தனிச்சொல்)

அதனால்,

(சுரிதகம்)

சேவ்வாய்ப் பேதை இவள்திறத்
தெவ்வா றுங்கொலிஃ தெண்ணிய வாறே."

[இஃது இடை இடைத் தனிச்சொல்லைப்பெற்று ஆசிரியச் சுரிதகத்தால் முடிந்த தரவிணைக் கொச்சகக் கலிப்பா.]

குறிப்பு:—சுரிதகம் பெற்றதைச் **சுரிதகத் தரவு கோச்சகக் கலிப்பா** என்றும், சுரிதகம் பெறாததை **இயல்தரவு கோச்சகக் கலிப்பா** என்றும், தரவு இரட்டித்துச் சுரிதகம் பெற்றதைச் **சுரிதகத் தரவிணைக் கோச்சகக் கலிப்பா** என்றும், சுரிதகம் பெறாது இரட்டித்து வரும் தரவை இயல் **தரவிணைக் கோச்சகக் கலிப்பா** என்றும் வழங்குவாரும் உளர் என அறிக.

6. **சிஃறாழிசைக் கோச்சகக் கலிப்பா:**—முதலில் ஒரு தரவும், அதன்பின் ஒரு தனிச்சொல்லும், பின் ஒரு தாழிசையும், அதன்பின் ஒரு தனிச்சொல்லும், மீண்டும் ஒரு தாழிசையும், அதன் பின் ஒரு தனிச்சொல்லும், பின்னும் ஒரு தாழிசையும், அதன்பின் ஒரு தனிச்சொல்லும் பெற்று, ஆசிரியச் சுரிதகத்தால் முடிந்து, நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவில் சிறிது வேறுபடுவது **சிஃறாழிசைக் கோச்சகக் கலிப்பா** என வழங்கப்படும்.

சிஃறாழிசைக் கோச்சகக் கலிப்பா

(தரவு)

பரூஉத்தடக்கை மதயானைப்
பணையெருத்தின் மிசைத்தோன்றிக்
குரூஉக்கொண்ட வெண்குடைக்கீழ்க்
குடைமன்னர் புடைசூழப்
படைப்பரிமான் தேரினொடும்
பரந்துலவும் மறுகினிடைக்
கொடித்தானை இடைப்பொலிந்தான்
கூடலார் கோமானே.

(தனிச் சோல்)

ஆங்கொருசார்,

(1. தாழிசை)

உச்சியார்க் கிறைவனாய் உலகமெலாம் காத்தளிக்கும்
பச்சையார் மணிப்பைம்பூண் புரந்தரனாப் பாவித்தார்
வச்சிரங் காணாத காரணத்தான் மயங்கினரே;

(தனிச்சோல்)

ஆங்கொருசார்,

(2. தாழிசை)

அக்காலம் அணிநிரைகாத் தருவரையால் பனிதவிர்த்து
வக்கிரனை வடிவழித்த மாயவனாப் பாவித்தார்,
சக்கரங் காணாத காரணத்தால் சமழ்த்தனரே;

(தனிச் சோல்)

ஆங்கொருசார்,

(3. தாழிசை)

மால்கொண்ட பகைதணிப்பான்
மாத்தடிந்து மயங்காச்செங்
கோல்கொண்ட சேவலங்
கொடியவனாப் பாவித்தார்,
வேல்கொண்ட தின்மையால்
விம்மிதராய் நின்றனரே.

(தனிச் சோல்)

அஃதான்று,

(சுரிதகம்)

கோடித்தேர்த் தோன்றல் கொற்கைக் கோமான்
நின்புகழ் ஒருவன் செம்பூண் சேஎய்
என்றுநனி அறிந்தனர் பலரே; தானும்
ஐவருள் ஒருவனென் றறிய லாகா
மைவரை யானை மடங்கா வென்றி
மன்னவன் வாழியென் றேத்தத்
தென்னவன் வாழி திருவொடும் பொலிந்தே.

[இது நான்கடித் தரவும், மூன்றடித் தாழிசை மூன்றும், சுரிதகமும் கொண்டு, இடையிடையே தனிச்சொல்லைப்பெற்று, நேரிசை ஒத்தாழிசைக் கலிப்பாவிற் சிறிது வேறுபட்டு வந்தமை காண்க.]

தமிழ்ப் பாடம் 67.

நள வெண்பா—கலி நீங்கு காண்டம்

[305-வது பக்கத் தொடர்ச்சி]

தன்மக்கள் மொழிந்தமொழி கேட்ட நளன் அவர் அடைந்திருந்த நிலைமைக்கு வருந்தினனேனும் அவர்கள் செம்மையாய்ப் பேசும் திறத்தைக் கண்டு மகிழ்வும் எய்தினான். எய்தி மேலும் சில வார்த்தைகள் அவர்களோடு பேச விரும்பினான். விரும்பியவன் விளையாட்டாகச் சொன்ன சொற்கள் அம்மக்களுக்குக் கோபம் மூட்டியதையும், அக்கோபத்தை நளன் தணித்ததையும் கீழ்வரும் நான்கு செய்யுள்கள் கூறுகின்றன.

உங்க ளரசொருவ னாளநீ ரோடிப்போந்
திங்க ணுறைத லிழுக்கன்றோ—செங்கை
வளவரசே யென்றுரைத்தான் மாதவத்தாற்பெற்ற
இளவரசை நோக்கி யெடுத்து. 61.

பதப்பிரிவு:—உங்கள் அரசு ஒருவன் ஆள நீர் ஓடிபோந்து இங்கண் உறைதல் இழுக்கு அன்றோ செம் கை வள அரசே என்று உரைத்தான் மா தவத்தால் பெற்ற இள அரசை நோக்கி எடுத்து.

அன்வயம்:—மாதவத்தால் பெற்ற இளவரசை நோக்கி, "செம்கை வள அரசே, உங்கள் அரசு ஒருவன் ஆள நீர் ஓடிப்போந்து இங்கண் உறைதல் இழுக்கு அன்றோ" என்று எடுத்து உரைத்தான்.

பதவுரை.

மா - பெரிய
தவத்தால் - தவத்தின் பயனாக
பெற்ற - பெற்ற
இளவரசை - இளவரசனாகிய இந்திரசேனனை
நோக்கி - பார்த்து,
"செம் - சிவந்த
கை - கைகளின்
வளம் - வளம்பொருந்திய
அரசே - அரசனே,
உங்கள் - உங்களுடைய
அரசு - இராச்சியத்தை
ஒருவன் - வேறொருவன்
ஆள - ஆளும்படிவிட்டு
நீர் - நீங்கள்
ஓடிப்போந்து - ஓடிவந்து
இங்கண் - இவ்விடத்தில்
உறைதல் - வசிப்பது
இழுக்கு அன்றோ - அவமான மாகாதோ!"
என்று - என்று (நளன்)
எடுத்து - எடுத்து
உரைத்தான் - சொன்னான்.

விரிவுரை:—பேசுந் திறமையுடைய சிறுமக்களைக் கண்டால் யாவரும் அவர்களது வாயைக் 'கிண்டுவது' வழக்கம். ஆனால் அது ஒவ்வொரு சமயம் சொன்னவர்க்கே மிக்க ஆபத்தாய் முடிவதுமுண்டு. நளனுக்கு இங்கே அது அப்படி ஆயிற்று. இதைக்கேட்ட இந்திரசேனனுக்கும் இந்திரசேனைக்கும், "தேர்ப்பாகன் இவன் கோமக்கள் நம்மைப் பார்த்து இப்படியும் உரைப்பதுவோ" என்று வெஞ்சினம் மூளமூளப் பின்வருமாறு எதிர் விளம்பினர்.

நெஞ்சாலிம் மாற்ற நினைந்துரைக்க நீயல்லா
தஞ்சாரோ மன்ன ரடுமடையா—எஞ்சாது
தீமையே கொண்ட சிறுதொழிலா யெங்கோமான்
வாய்மையே கண்டாய் வலி. 62.

பதப்பிரிவு:—நெஞ்சால் இ மாற்றம் நினைந்து உரைக்க நீ அல்லாது அஞ்சாரோ மன்னர் அடு மடையா எஞ்சாது தீமையே கொண்ட சிறு தொழிலாய் எம் கோமான் வாய்மையே கண்டாய் வலி.

பதவுரை.

"அடு - சமைக்கின்ற
மடையா - சமையற்காரனே,
இ - இப்படிப்பட்ட
மாற்றம் - வார்த்தையை
நெஞ்சால் - மனத்தினால்
நினைந்து - நினைந்து
உரைக்க - சொல்ல,
நீ - நீ
அல்லாது - கிடக்க,
மன்னர் - அரசர்களும்
அஞ்சாரோ - பயப்படமாட்டாரோ", (என்று இந்திரசேனை வெகுள, இந்திரசேனன்)
"தீமையே - தாழ்மையையே
எஞ்சாது - அவமானமில்லாமல்
கொண்ட - கொண்டிருக்கின்ற
சிறு - அற்பமாகிய
தொழிலாய் - தொழில் செய்வோனே,
எம் - எங்களுடைய
கோமான் - அரசனுக்கு
வலி - பலம் என்பது
வாய்மையே - சத்தியமேயாகும் என்பதை
கண்டாய் - அறியாயோ" (எனக் கூறினான்)

விரிவுரை:—நளன் இளவரசைநோக்கிச் சொன்னபோதிலும் அதற்குப் பதில் இருமக்களும் சொன்னதாகக்கொள்வது நலம். தம் மானங்கெடப்பேசினான் என்ற சீற்றம் மிக எழுந்த மகள் இந்திரசேனை பதைபதைத்து, "ஏ, சமையல் தொழில் செய்கின்ற கீழ் மகனே, எப்படியடா நினைத்து நீ இந்த வாசகம் இயம்பினாய்! நீ கிடக்க எங்களுக்குச் சமநிலையிலிருக்கின்ற அரசர்களுங்கூட எம்முடைய கதியைப் பழித்து இவ்வாறு நிந்திக்க அஞ்சுவார்களே" என இடித்துரைக்கவும், அவ்வுரையைத் தொடர்ந்து இந்திரசேனன், "ஆனால், உன்போன்ற அற்பத் தொழிலாளிகள் அரசருடைய தன்மையை, எவ்வாறு அறிவார். எங்களரசை ஒருவனுள்வது நளன் வலியின்றிப் போர்தோற்று நாட்டை இழந்ததால் நேர்ந்ததன்று. சத்தியத்திற்குக் கட்டுப்பட்டதால் இப்படி ஆயிற்று. அதன் அருமையை நாங்கள் உனக்குக் கூறி ஏது பயன்! பாகனாகிய நீயோ இன்னவைகளை உணரமாட்டாய்" என முடித்தனன். முடித்து நளனுடைய ஆற்றலையும் அவன் தனிக்கோல் செலுத்திய திறத்தையும் அடுத்த செய்யுளில் எடுத்துக்காட்டுகின்றான்.

எந்தை கழலிணையி லெம்மருங்குங் காணலாங்
கந்து சுளியுங் கடாக்களிற்றின்—வந்து
பணிமுடியிற் பார்காக்கும் பார்வேந்தர் தாழும்
மணிமுடியிற் றேய்ந்த வடு.

பதப்பிரிவு:—எந்தை கழல் இணையில் எ மருங்கும் காணல்ஆம் கந்து சுளியும் கடா களிற்றின் வந்து பணி முடியில் பார் காக்கும் பார் வேந்தர் தாழும் மணி முடியில் தேய்ந்த வடு.

அன்வயம்:—பணிமுடியில் பார்காக்கும் பார்வேந்தர், கந்து சுளியும் கடாக் களிற்றின் வந்து, தாழும் மணிமுடியில் தேய்ந்த வடு, எந்தை கழல் இணையில் எம்மருங்கும் காணலாம்.

பதவுரை.

"பணி - ஆதிசேஷன் என்னும் பாம்பினது
முடியில் - தலையிலுள்ள
பார் - பூமியை
காக்கும் - காக்கின்ற
பார் - பெரிய
வேந்தர் - அரசர்கள், (தங்களுடைய கப்பங்களைச் செலுத்துவதற்கு)
கந்து - (கட்டுகின்ற) தூணை
சுளியும் - கோபித்து முறிக்கின்ற
கடாக்களிற்றின் - ஆண் யானைகளின்மேல்
வந்து - வந்து
தாழும் - வணங்குகின்ற
மணி - இரத்தினம் இழைத்த
முடியால் - (அவர்களது) கிரீடங்களால்
தேய்ந்த - தேய்ந்து தேய்ந்து உண்டான
வடு - தழும்புகளை
எந்தை - எம் தந்தையினுடைய
கழல் இணையில் - இரண்டு பாதங்களிலும்
எ - எல்லா
மருங்கும் - பக்கத்திலும்
காணலாம் - பார்க்கலாம்" (என்று இந்திரசேனன் செப்பினன்).

விரிவுரை:—பெருமிதச் சொற்கள் மிகநன்று பேசவல்லான் இவ்விளவரசன், சூளாமணியில் கூறியிருக்கின்றபடி, "அடிநிழல் அரசரை அளிக்கும் ஆய்கதிர்" முடியுடை வேந்தன் நளன் என்பதை அவ்வாகுகப் பாகனுக்குத் தெரிவிக்கின்றான். தன்னுடைய வாய்மையையும் ஆற்றலையும் இன்னவாறு தன்மக்கள் புகழக்கேட்ட நளனது மனம் எத்துணை மகிழ்வு அடைந்திருக்குமென்பதை அளந்தியம்ப யாவரால் இயலும். இவ்வுலகில் ஒருவன் அடைந்த இன்பத்திற்குச் சமமான துன்பமும், துன்பத்திற்குச் சமமான இன்பமும் எய்தியே தீரும் என்பார். இவ்வளவு காலம் தான் உற்ற துயரிற்கெல்லாம் இணையான இன்பம் இதுவேயென நளன் மதித்திருப்பான். இருப்பினும் இம்மக்கள் வாயை இனித்தூண்டப்படாதென்பது முணர்ந்தான்.

மன்னர் பெருமை மடைய ரறிவரோ
உன்னை யறியா துரைசெய்த—என்னை
முனிந்தருள லென்று முடிசாய்த்து நின்றான்
கனிந்துருகி நீர்வாரக் கண். 64.

பதப்பிரிவு:—மன்னர் பெருமை மடையர் அறிவரோ உன்னை அறியாது உரை செய்த என்னை முனிந்து அருளல் என்று முடி சாய்த்து நின்றான் கனிந்து உருகி நீர் வார கண்.

அன்வயம்:—கனிந்து உருகிக் கண்நீர் வார, "மன்னர் பெருமைமடையர் அறிவரோ! உன்னை அறியாது உரைசெய்த என்னை முனிந்து அருளல்" என்று முடிசாய்த்து நின்றான்.

பதவுரை.

கனிந்து - (மக்கள் உரையைக்கேட்ட நளனது மனம்) கரைந்து
உருகி - உருகி
கண் - கண்களிலிருந்து
நீர் - நீர்
வார - பெருக,
"மன்னர் - மன்னர்களது
பெருமை - பெருமையை
மடையர் - (என்போன்ற) சமையற்காரர்கள்
அறிவரோ - அறிவார்களோ! (ஆதலால்)
உன்னை - உன்னை
அறியாது - தெரிந்துகொள்ளாமல்
உரைசெய்த - பேசிய
என்னை - (எளியேனாகிய) என்னை
முனிந்து அருளல்-அருள் புரிந்து கோபிக்காதே"
என்று - என்று சொல்லி
முடி - தன் தலையை
சாய்த்து - வணங்கி
நின்றான் - நிற்கலாயினான்.

விரிவுரை:—"மன்னர் பெருமை மடையர் அறிவரோ" என்பது நளன் வாயில் வஞ்சனையாய் வந்து மிகவும் நயமாக நிற்கின்றது. "உன்னை அறியாது உரைசெய்தஎன்னை முனிந்தருளல்" என்பதும் அன்னதே. "இவ்வளவு வலிய வாய் உடையவன் நீ என்பது உணராமல் எதோ விளையாட்டாகச் சொல்லிவிட்டேன். அதற்குத் தக்க பலனும் கிடைத்தது" என்ற உட்கருத்தோடு, "உன்னுடைய பெருமை தெரியாமற் பேசிய என்போன்ற சிறுதொழிலாளனைப் பொறுத்தருள்" என்ற வெளிப்பொருளும் அடங்கிய வாசகம் அது.

ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,

எழுதியவோர்

செந்தமிழ்க்காதை.

கலா நிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

பொதிகை நிகண்டு

(இரண்டாம் பகுதி)

[287-வது பக்கத் தொடர்ச்சி]

ச

917 சகடம் பேரிகையும் பாண்டிலு மாகும்.
918 சகமோ ரெண்ணும் பூமியுஞ் சட்டையும்
சமுகமும் பாதியுஞ் சட்கோணு மாகும்.
919 சகோரம் சக்கர வாகமும் புள்ளும்
பேராந்தை யுஞ்செம் [1]போத்து மாகும்.
920 சகுந்தம் புட்பொதுவும் பூகமு மாகும்.
921 சகுனம் புட்பொதுவு நிமித்தமுங் கிழங்கும்.
922 சகுனி பறவையு நிமித்தம்பார்ப் பவனும்.
923 சக்கரஞ் செங்கோலுங் கடலும் பிறப்பும்
தேருருளுந் தரணியு மலையும் பெருமையும்
வட்டமு மோர்புள்ளுஞ் சக்கரமு மாகும்.
924 சக்கிரி குயவனுஞ் செக்கானும் பாம்பும்
மாயனு மரசனும் வழங்க லாகும்.
925 சங்க மெனும்பெயர் சவையும் புணர்ச்சியும்
கணைக்காலுஞ் சங்கும் வளையும் வெற்றியும்
புலவரு மன்புமோ ரெண்ணு மாகும்.
926 சங்கு கைவளையுங் கோழியு மாகும்.
927 சச்சை குழம்புஞ் சட்டையு மாகும்.
928 சசிபுலோ மிசையுங் கடலுஞ் சந்திரனும்
மழையுங் கர்ப்பூரமும் வழங்க லாகும்.
929 சடம்பொய்யு முடலும் வஞ்சமு மாகும்.
930 சடையே வேணியும் வேரு மாகும்.
931 சடிலம் நெருக்கமுஞ் சடையுங் குதிரையும்.
932 சண்டம் குரோதமு மேன்மையு மாகும்.
933 சண்டன் பானுவுங் கூற்றும் காலனும்
அலியு மெனவே யறைய லாகும்.
934 சதம் புள்ளினிறகு நூறு முறுதியும்
இலையு மெனவே யியம்ப லாகும்.
935 சத்தியஞ் சபதமு மெய்யு மாகும்.
936 சத்திரங் குடையு மிரும்பும் வேள்வியும்
கைவேலுஞ் சத்திர சாலையும் வெண்குடையும்
சத்திரக் கருவியுஞ் சாற்ற லாகும்.
937 சத்தி சூலமு முமையுந் தாயும்
வலியுங் குடையும் வேலுங் கான்றலும்
துவசமு மிச்சையு மிசையுஞ் செய்யுளும்.
938 சதிதாள வொத்துங் கற்புடை யாளும்
சதிசெய் வானு முரோகணியும் வட்டமும்.
939 சந்தங் கவிதையு நிறமுஞ் சந்தனமும்
அன்பும் வனப்பு மறைய லாகும்.
940 சந்தி யந்தியுஞ் சதுக்கமு மிசையும்
மூங்கிலு மெனவே மொழிய லாகும்.
941 சந்தானந் தேவ தாருவுஞ் சந்தானமும்.
942 சம்புவே சிவனு மாலு மயனும்
சூரியனு நரியு மோர்புல்லு நாவலும்
எலுமிச் சும்வச் சிரமு மியம்பும்.
943 சம்பஞ் சம்பீரமும் வயிரமு மாகும்.
944 சமித்தல் பொறுத்தலு கடத்தலு மாகும்.
945 சமழ்த்தல் நாணமுந் தாழ்த்தலும் வருத்தமும்.
946 சமனே யணித்தலு நடுவு நமனும்.
947 சயஞ் சருக்கரையு மாலையும் வெற்றியும்
பானுவு மல்லியும் பகர லாகும்.
948 சயிந்தவங் குதிரையும் வரம்புந் தலையும்
இந்துப்பு மெனவே யியம்ப லாகும்.
949 சரபஞ் சிம்புள்ளும் [2]வெற்பாடு மாகும்.
950 சரணம் பாதமு நகரமுஞ் சார்பும்.
951 சரிதை பிச்சையுஞ் சரிதைத் தொழிலும்.
952 சரம்மூக்கின் காற்றுங் கணையு நாணலும்
பொருமணி வடமும் மலர்ச்சரமு மாகும்.
953 சரிசமமும் வழியுங் கைவளையு மழகும்.
954 சராவ மே[ய]கலுஞ் சுத்திகையுஞ் சலாகையும்.
955 சருவே தெய்வ வுணவுஞ் சோறும்
அணங்கு மெனவே யறைய லாகும்.
956 சருவம் பானையுஞ் சட்டுவமு மாகும்.
957 சலமே நீரும் பொய்யு நடுக்கமும்
வயிரமுங் கோபமும் வழங்க லாகும்.
958 சலதரம் புயலும் வாவியு மாகும்.
959 சலாகை நன்மணியுஞ் சவளமு நாராசமும்.
960 சவுரியே திருவு மாலுங் கன்னனும்
சனியும் யமனும் யமுனையு மாகும்.
961 சவிமணிக் கோவையுஞ் செவ்வையும் வலியும்
வனப்புங் காந்தியு மெனவகுத் தனரே.
962 சவமே பிணமு மூங்கிலு மாகும்.
963 சனியொரு வாரமுந் துக்கமு மாகும்.

சா

964 சாகம் வெள்ளாடுந் தேக்கும் வண்டும்
965 சாகினி யுந்தே னீயுஞ் சாற்றும்
சாகினி சேம்புங் கீரையு மாகும்.
966 சாகரங் கடலுந் துயிலொழித் தலுமாம்.
967 சாகாடு பண்டியு மோர்நாளு மாகும்.
968 சாடி கூறையுந் தாழியுங் கோட்சொல்லும்.
969 சாதகம் வானம் பாடியும் பிறப்பும்
சாதனையும் பூதமுஞ் சாற்ற லாகும்.
970 சாதனை பொய்சலஞ் சாதித்தலு மாகும்.
971 சாதி மூங்கிலும் பிரம்புங் கள்ளும்
தேக்குஞ் சிந்திலுஞ் சிறுசெண் பகமும்
தேனுஞ் சாதியுஞ் செப்ப லாகும்.
972 சாத முண்மையுஞ் சாதமும் பூதமும்.
973 சாத்தன் காரியுஞ் சாத ரூபியும்.
புத்தனு மருகனும் புகல லாகும்.
974 சாத்திரி நெல்லியு முள்ளியு மாகும்.
975 சாந்தாற்றி யால வட்டமும் பீலியும்.
976 சாந்தஞ் சந்தனமும் பொறுமையும் சாந்தமும்.
977 சாபஞ் சபித்தலும் வில்லு மசமும்.
978 சாமஞ் சாமமும் பச்சையுங் கருமையுஞ்
சாமவேதமு மிரவு மாகும்.
979 சாம்பல் கூம்புதலும் பழம்பூவுஞ் சாம்பலும்.
980 சாம்புதல் சாய்தலுங் கூம்புதலு மாகும்.
981 சாமி யாசானு மரசனும் தலைவியும்
வியாழமுந் தலைவனுஞ் சாமியும் வேளும்.
982 சாம்பு பொன்னும் பொறையுஞ் சாற்றும்.
983 சாயல் சரிவு மழகு மென்மையும்
மெய்ப்பாடு மொப்பும் விளம்ப லாகும்.
984 சாரல் யாழோசையும் மலையின் சாரலும்
மலையின் மென்பாலும் வழங்க லாகும்.
985 சாரிகை யசைச்சொல்லும் பூவையுஞ் சுங்கமும்
சுழற்காற் றும்மெனச் சொல்ல லாகும்.
986 சாரங்கஞ் சாதகப் புள்ளும் வண்டும்
மானு மெனவே வழங்க லாகும்.
987 சாரச மினிமையுஞ் சாரமு மாகும்.

(பிரதி) 1. போரு. 2. வெற்பு.

18125

938 சார்ங்க மாயோன் வில்லும்விற் பொதுவும்
989 சாரே யிடமும் பற்றுஞ் சார்பும்.
990 சாரணர் சமண முனிவோரு மொற்றரும்.
991 சாலம் வலேயுஞ் சவையு மாச்சாவும்
சாலகம் கூட்டமு மதிலும் விசாலமும்.
992 சாலி கள்ளுஞ் செந்நெல்லுங் கவசமும்
அருந்ததி யும்மென வறைய லாகும்.
993 சாலே குதிரைப் பந்தியுஞ் சோலேயும்
கோயிலுஞ் சத்திரமுங் கூற லாகும்.
994 சாலகஞ் சாளர வாயிலும் வலேயும்
பூமொட்டு மென்னப் புகல லாகும்.
995 சால்பு மாட்சிமையுஞ் சான்ருண்மை யுமாம்.
996 [3]சாலே நீர்ச்சாலு முழுத சாலுமாம்.
997 சாழல் விளேயாட்டியுங் கரடியு மாகும்.
998 சாறு கள்ளும் விழவுஞ் சாறும்
தருவின் குலேயுஞ் சாற்ற லாகும்.
999 சானகி வேயுந் திருவுங் கங்கையும்.
1000 சானம் பொன்வர்க்கமுந் தமிழு மாகும்.
1001 சானு வெற்பு மதன்பக்கமு முழந்தாளும்.
1002 சான்ரு னருக்கனு மும்மீனு மீக்கோளும்.

3. சாலே நீர்ச்சாலேயு.

நம்மாழ்வார் வைபவம்

திருவாய்மொழி

4-பத்து 10-ம் தசகம்

[307-வது பக்கத் தொடர்ச்சி]

1-ம் பாசுரம்.

ஒன்றுந் தேவு முலகு முயிரும்
மற்றும் யாதுமில்லா
அன்று நான்முகன் றன்னேடு தேவ
ருலகோ டுயிர்படைத்தான்
குன்றம் போல்மணி மாட நீடு
திருக்குரு கூரதனுள்
நின்ற வாதிப்பிரான் நிற்க மற்றெத்
தெய்வ நாடுதிரே

அவதாரிகை:—சென்ற தசகத்தில் 9 ம் பாசுரத்தில் (I), (II), (III), என்று விசேஷக் குறிப்பு மூன்று எழுதியுள்ளோம். அவைகளே இப்பாட்டுக்கு முகவுரையாகப் படித்தால் இத்தசகத்தின் கருத்து நன்று விளங்கும். அவைஷ்ணவ ஜனங்களுள்ள உலகஸஹவாஸத்தை விடுவதற்கு முடியவில்லேயென்று தெரிந்த பின்னர் ஆழ்வார் ஜனங்களே உபதேசத்தால் திருத்திப் பகவத் பக்தர்களாக்கியேனும் அவர்களுடன் கலந்து பகவானே யநுபவிப்போமென்று எண்ணி இத்தசகத்தில் பரோபதேசத்தில் இழிந்தபடி.

உரை:—தேவும் - தேவதைகளும், உலகும்-உலகங்களும், உயிரும்-எல்லாப் பிராணிகளும், மற்றும்-வெறே எவ்வகையானவஸ்துக்களும், யாதும் இல்லா-மேல் குறிப்பிட்ட யாதொன்றுமில்லாத, அன்று-பூர்வ சிருஷ்டி ஆரம்பத்தில், நான் முகன் தன்னேடு-பிரம்மாவுடன், தேவர் - தேவர்களேயும், உலகோடு - உலகங்களோடு, உயிர் - பிராணிகளேயும், படைத்தான் - சிருஷ்டித்தவனை (பிரம்மாவின் அந்தராத்மாவான ஆதிபிரான்) குன்றம்போல்-மலேயைப்போன்ற, மணிமாட நீடு - அழகான மாளிகைகளே உடைத்தாயிருக்கிற பெரிய (மாடம் - கிரஹம்) திருக்குருகூரதனுள்-திருநகரியில், நின்ற-ஸர்வ சுலபனுய்நின்ற, ஆதிபிரான்-எல்லாவற்றிற்கும் முதற்பொருளான உபகாரகன், நிற்க - இருக்க, மற்று எத்தெய்வம் நாடுதிரே - வேறு எந்தத் தெய்வத்தை ஆச்ரயிக்கத் தேடுகின்றீர்கள்?

விசேஷக் குறிப்பு:—இங்கு, பூர்வ உரையாசிரியர்கள், சுருதி ஸ்மிருதி உபநிஷத்து இதிகாஸ புராணங்கள் முதலியவைகளிற்கண்ட வசனங்களே எடுத்து, பிரம்மா, ருத்திரர் இவர்கள் மூகமாய் உலகத்தை நாராயணன்படைத்துஅழித்துக் காக்கின்ருனென்றும்அவர்கள் அவன் ஆஞ்ஞையால் அவனது பிரயோசனத்திற்காகவே மேல்கண்டபடி ஆக்கி அழிக்கின்ருர்களென்றும் அவனே சர்வநியதாவென்றும், அவர்களாலும் ஸகல இதர தேவதைகளாலும் ரிஷிகளாலும் அவனே பூஜ்ஜியமானென்றும், ஸர்வ வியாப்பியமாயிருந்து எங்கு மவனே நிறைந்திருப்பதால் அவனே பரம்பொருளென்றும், அவனே ஸர்வ சுலபனென்றும் நிரூபிக்கிருர்கள். மற்றுமோர் தெய்வத்தை ஏன் நாட வேண்டுமென்றும் முடிக்கிருர்கள்.

2-ம் பாசுரம்.

நாடி நீர்வ ணங்குந் தெய்வமும்
மும்மையும் முன்படைத்தான்
வீடில் சீர்ப்புக ழாதிப் பிரானவன்
மேவி யுறைகோயில்
மாட மாளிகை சூழ்ந்தழ காய
திருக்குரு கூரதனேப்
பாடி யாடிப் பரவிச் சென்மின்கள்
பல்லுல கீர்பரந்தே

உரை:—பல் உலகீர்-இந்த உலகத்திலுள்ள பலவிதமான லௌகீர்களே (அதாவது பல தெய்வங்களிடம் ருசியும் வாஸனேயும் உள்ளவர்களே) நாடி - தேடி, நீர் வணங்கும் தெய்வமும் -நீங்கள் பூஜிக்கின்ற தெய்வங்களேயும், உம்மையும்-உங்களேயும், முன்-படைத்தான் - பிரளயகாலத்திலே படைத்தான், வீடில் சீர் - எப்பொழுதும் இடைவிடாத புகழ் உடைய, ஆதிப்பிரான் மேவியுறை கோயில் உள்ள அழகான திருநகரில், ஆடி பாடி - நர்த்தனம்செய்து அவனேப் புகழ் பாடி, பரவி - எங்கும் சென்று துதிசெய்து, பரந்து சென்மின்கள் - எங்கும் சஞ்சரியுங்கோள்.

3-ம் பாசுரம்

பரந்த தெய்வமும் பல்லுலகும் படைத்தன்
றுடனே விழுங்கிக்
கரந்து மிழ்ந்து கடந்தி டந்தது
கண்டும் தெளியகில்லீர்
சிரங்க ளால மரர்வ ணங்கும்
திருக்குரு கூரதனுட்
பரன்திற மன்றிப் பல்லுல கீர்தெய்வ
மற்றில்லே பேசுமினே.

பதவுரை:—பல்லுலகீர் - பலவிதமான தெய்வங்களேக் கொண்டாடும் உலக ஜனங்களே, பரந்த-சக்திமான்மகளான, தெய்வமும் - தெய்வ ஜாதிகளேயும், பல்லுலகும் - அநேக உலகங்களேயும், படைத்து - சிருஷ்டித்து, உடனே விழுங்கி - நித்திய பிரளயத்தில் தன் வயிற்றிலே வைத்து ரக்ஷித்து, கடந்து - திருவிக்ரமாவதாரத்தில் மூன்றடியால் மூன்று லோகங்களேயும் அளந்து, இடந்தது-பூமி சமுத்திரத்தில் மூழ்கிப் போகவே அதைவராஹாவதாரம்செய்து மேலுக்குத் தூக்கியது, கண்டும்-ஆகிய இவைகளேயெல்லாம் சாஸ்திரத்திலும் புராணங்களிலும் கண்டிருந்தும், தெளியகில்லீர்-நாராயணன் பரதெய்வமென்று உங்களுக்குத் தெளிவு வரவில்லேயா? சிரங்களால் அமரர் வணங்கும்-தெய்வங்கள் எல்லாம் சிரசால் வணங்கும், திருக்குருகூர் அதனுள் பரன்திறமன்றி-அந்தப்பரம்பொருளாகிய ஆதிபிரானேத் தவிர, தெய்வம் மற்றில்லே-மற்றெவருமில்லே. நாம் மேற்சொன்னதெல்லாம் பிரமாணசித்தம்; பேசுமினே-இதர பிரமாணங்கள் உண்டாகில் யார் பெருந்தெய்வமென்று நீங்கள் கொண்டாடுகிறீர்களோ அதை நிரூபியுங்கோள்.

குறிப்பு:-தாம் பரம்பொருளாகிலும் குழந்தையின் தொட்டில் பக்கத்திலே காத்துரக்ஷிப்பதற்காகத் தாய் படுக்குமாப்போலே இவ்வுலகத்தில் அர்ச்சாவதாரமாக ஆத்மாக்களே இரக்ஷிப்பதற்குத் திருக்கோயில்கள் கொண்டிருக்கின்ருனென்று திருவுள்ளம்.

4-ம் பாசுரம்

பேச நின்ற சிவனுக்கும் பிரமன்றனக்கும் பிறர்க்கும்
நாயகனவனேகபாலநன்மோக்கத்தில் கண்டுகொள்
நேசமாமதில்சூழ்ந்தழகாயதிருக்குருகூரதனு [மின்
லீசன்பாலோரவம்பறைதலென்னுவதிலிங்கியர்க்கே.

உரை:—முதல் பாசுரத்திலும் இரண்டு மூன்று பாசுரங்களிலும், *பிரம்ம ருத்திரர்கள் பகவானது பிரேரணேயால் சிருஷ்டி ஸம்ஹாராதிகள் செய்கிருர்களென்று சொன்னதாலேயே அவ்விருவருக்கும் ஈசுவரதத்தவ மில்லேயென்று ஒருவாறு தீர்ந்துபோனும், "பிரம்மா" சப்தம் "பிரஹத் - பெரிய பொருளென்றும், "ஈசன்" "ஈசனுன" சப்தங்கள் பரம்பொருளென்றும்அநுமானத்தால் ஏற்படுத்தக்கூடுமென்ற சந்தேகத்தை இப்பாசுரத்தால் நிவர்த்திக்கிருர்.

பிரமாணங்களால், பிரம்மனுக்கும் சிவனுக்கும் மற்று எல்லோருக்கும் ஸ்ரீமந்நாராயணனே நாயகன்—பிரமன் சிரசு பரமசிவனது கையில் பிரம்மஹத்தி தோஷத்தால் ஒட்டிக்கொள்ளவும் பரமசிவன் நாராயணனே வேண்டிக்கொண்டதன்மேல், அவனது அநுக்கிரஹத்தால் பிரம்மகபாலம் பரமசிவன் கையை விட்டது. - ஆகையால் அநுமானத்தால் வாதிப்பவர்களுக்குப் பகவானிடத்தில் (அவம்) தோஷத்தை ஆரோபித்துக் குறைகூறுவதினுல் என்ன பிரயோசனமாகும்.

5-ம் பாசுரம்

இலிங்கத் திட்ட புராணத் தீரும்
சமணரும் சாக்கியரு
மலிந்து வாது செய்வீர்களு மற்றுநுந்
தெய்வமு மாகிநின்ருன்
மலிந்து செந்நெல் கவரி வீசும்
திருக்குரு கூரதனுள்
பொலிந்து நின்றபிரான் கண்டீ ரென்றும்
பொய்யில்லே போற்றுமினே.

உரை:—இலிங்கத்திட்ட புராணத்தீரும்-ஸ்காந்த புராணம் லிங்க புராணம் முதலியவைகளின் உதவியைக்கொண்டு ருத்திரனேப் பரதெய்வமென்பாருக்கும், சமணரும்-ஜைநமதக்காரர்களுக்கும், சாக்கியரும் - பௌத்தருக்கும், மலிந்து வாது செய்வீர்களும் - கணுதர் வைசேஷிகர் முதலான நியாயசாஸ்திர வாதிகளுமாகிச் சுஷ்கதர்க்கத்தால் தங்கள் சித்தாந்தத்தை உறுதிப்படுத்த எத்தனிப்பீர்களுக்கும், மற்றும் - மற்றவர்களுக்கும், தெய்வமாகி நின்ருன் - தெய்வமாகிநின்றவன் யாரெனில், திருக்குருகூர் அதனில் விளேந்த செந்நெல் பயிரும்கூடச் சாமரம் வீசுவதுபோல், பொலிந்து நின்றபிரான் - ஸர்வ யசஸாலும் விளங்கி நிற்கும் ஆதிப் பிரான், கண்டீர் - அவனேதான், பொய்யில்லே - இது பிரமாண ஸித்தம்-"ஸகல வஸ்துக்களும் நாராயணுத்மகம்" அன்றல்லவோ சுருதி பிராமாணம். போற்றுமின்-ஸ்துதிசெய்யுங்கோள்.

6-ம் பாசுரம்

போற்றி மற்ருேர் தெய்வம் பேணப்
புறத்திட் டும்மைப்பின்னே
தேற்றி வைத்த தெல்லீரும் வீடு
பெற்ரு லுலகில்லேயென்றே
சேற்றில் செந்நெல் கமல மோங்கும்
திருக்குரு கூரதனுள்
ஆற்ற வல்லவன் மாயங் கண்டீ
ரறிந்தறிந் தோடுமினே.

உரை:—மற்ருேர் தெய்வம் - ஸ்ரீமந் நாராயணன் அல்லாத வேறு பிறதெய்வங்களே, பேணப்போற்றி-படிந்து துதிக்கும்படி, புறத்திட்டு - அவனே விட்டுத் தூர விலகும்படி, உம்மை - அன்னிய தேவதைகளே ஆச்ரயிக்கும் உங்களே, தேற்றிவைத்தது-உங்கள் இஷ்டதெய்வத்தினிடத்திலேயே நம்பிக்கையை ஊர்ஜிதப் படுத்தல் என்ன காரணம்கொண்டு என்ருல், எல்லீரும் - நற்குண நற்செய்கையல்லாத அஸத் கர்மங்களிலும் தீச்செயல்களிலும் வர்த்திக்கிற எல்லாரையும் விபாகமன்றிக்கே, வீடுபெற்ருல் - மோக்ஷத்திற்கு ஏகச் செய்தால், உலகில்லே - நல்லவர்க்கு நல்லகதி தீயவர்களுக்கு தீக்கதி என்கிற உலகத்தில் நடந்து வரும் நியதி இல்லாமல் போகுமென்று, சேற்றில் - செந்நெல் கமலம் ஓங்கும் திருக்குருகூரதனுள் - வயல்களில் நெல்லும் தாமரைப் புஷ்பங்களும் முளேத்து அலங்கரிக்கும் திருக்குருகூரில், ஆற்றவல்லவன் - முன் ஜன்மங்களிலிருந்து அநுசரிக்கும் புண்ணிய பாபங்களுக்கேற்பப் பின் ஜென்மங்களே நியமித்து ஆஞ்ஞை இடும் பகவானது, மாயம் கண்டீர்-ஆச்சரிய சக்திகளே என்பதைத் தெரிந்துகொள்ளுங்கோள். அறிந்து அறிந்து - இதைச் செவ்வனே ஆராய்ச்சி செய்து; ஓடுமினே - காலதாமதமின்றி நீங்கள் உடனே அவனே ஆச்ரயிங்கோள்.

7-ம் பாசுரம்.

ஓடியோடிப் பலபிறப்பும் பிறந்து மற்ருேர் தெய்வம்
பாடியாடிப் பணிந்து பல்படி கால்வழியேறிக் கண்டீர்
கூடி வானவ ரேத்த நின்ற திருக்குரு கூரதனு
ளாடு புட்கொடி யாதிமூர்த்திக் கடிமை புகுவதுவே.

உரை:—இதர தேவதைகளை வழங்குகிறவர்களைக் குறித்துக் கேட்கிறார். நீங்கள் ஜந்மஜந்மாந்திரங்களில் பிறந்து, ஓடியோடி-இந்தத் தெய்வம் அந்தச்தெய்வமென்று, மற்றோர் தெய்வம் - வேறு தேவதைகளை, பாடி ஆடி - நர்த்தனம் செய்தும் துதிசெய்தும், பணிந்து - வழிபட்டு, பல்படி கால்வழியேறி-வெவ்வேறு மார்க்கங்களில்புகுந்து, கண்டீர் - என்ன நன்மையை அடைந்தீர்கள்? ஒன்றுமில்லையே, கூடி வானவர் ஏத்தும்-உங்கள் தெய்வங்கள் உள்பட எல்லாத்தேவதைகளும் ஏத்தி நின்ற திருக்குருகூரகனுள், கருடத்துவஜத்தையுடைய, ஆதிமூர்த்திக்கு - முழு முதல் தெய்வமான ஆதிப்பிரானுக்கு, அடிமை புகுவது - பின் என்னசெய்யத் தக்கதென்றால் தாஸவிர்த்தி செய்வதே நலம்.

கம்பராமாயணம்

ஆரணிய காண்டம்—7. மாரீசன் வதைப் படலம்.

[314-வது பக்கத் தொடர்ச்சி]

அச்சம்விட் டரக்கனு மறத்தினு லுயர்ந்தான்.

காமுகக் கள்வனாய் எதிர்நின்ற இராவணன்றன் மனத்தினை மாற்றி உறுதிகள் புகலப்புகுகின்ற மாரீசனது உரைகளை ஆழ்ந்து கருதுதல் வேண்டும். இம்மாரீசனும் ஓர் அரக்கனே. ஒருகாலத்தில் உயிர்களுக்கு அளப்பரிய இடர்செய்திருந்த கொடியோன். தீயவை புரிவதில் மருகனுக்கு மாதுலன் குறைந்தவனல்லன். ஆயினும், தற்காலம் இராவணனுக்கும் மாரீசனுக்கும் ஒரு வேற்றுமையுளது. மெய்ம்மைபோல் என்றுந் தேய்வுறா இராமனது தூணியிற் றோய்ந்து வந்த பகழியின் சுடுசுவையினைப் பருகியிருப்பவன் மாரீசன்; மற்று, இராவணனோ இன்னும் அச்சுவை கண்டிலன். வான்மீக முனிவர்தம் கண்முன் இவ்வேற்றுமையே யாதினும் விஞ்சி நின்றது. ஆதலின் இராவணனுக்கு ஏற்றது எடுத்தியம்பிய மாரீசன் அறத்தின் திறம் நோக்கி அங்கு ஒன்றும் உரைக்க நினைத்திலன். "இணையிலா ஆற்றலுடையோன் இராகவன். அவனுடன் இகலி நீ பிழைப்பாயல்லை. வெகு பராக்கிரமசாலியாகிய இராமனுடைய மனைவியைக் கொழுந்துவிட்டெரியும் தீயின் ஒளியை எடுத்தோடக் கருதுபவன்போல் நீ எடுத்தோட எண்ணுவது ஒரு பொழுதும் முடியாதகாரியம். அவன் பாணத்தால் பன்முறை யான் பட்ட பாடு சிறியதன்று. உன்னுடைய ஆற்றலும் அவனுக்கொரு பொருளன்று. இக்காரியத்தால் நீ நாசமடையவே முயல்கின்றாய்," என்னுஞ் சில சொற்களுக்குள், மாரீசன் மூன்று சருக்கங்கள் பன்னிப் பன்னிப் பெருக்கும் வாக்கியங்களின் கருத்தையடக்கிவிடலாம். இவையனைத்தும் இராவணனை அச்சுறுத்தும்படி அமைந்திருக்கின்றனவே யன்றி அவனை யாதும் அறிவுறுத்தியவண்ணம் காண்பதரிது. சூடுண்ட பூனை தான் நெருப்பருகுச் செல்ல அஞ்சுவதுடன் வேறொரு பூனையின்பால் பரிவினால் அதனையும் செல்லவேண்டா எனத் தடுக்கின்ற சூழ்ச்சியை ஒக்குமிது. இராமனது பாணத்தால் இடியுண்டு உயிர் தப்பி ஓடிவந்து அவ்வனத்தில் உறைந்திருந்த மாரீசன், "கெட்ட செய்கைகளைவிட்டுத் தவவேடம் பூண்டு அன்று முதல் இவ்விடத்தில் தவஞ்செய்துகொண்டு வசிக்கின்றேன்" என்பானாயினும், அத்தவத்தின் பயனாய், "இராமனை வென்று நீ சீதையைக் கவர வல்லை யல்லை. மற்று, வல்லையே யாயினும், அது அறமன்றாதலின் செய்யற்க" என்று தருமத்தின் தகுதி நோக்கியொன்றும்உரைத்தற்குரிய முதிர்ச்சியின்னும் பெற்றிலன்போலும். அச்சமே இன்னமும் இவனது ஆசாரமாக இருக்கின்றது. ஆதலால்—

"மரங்களைப் பார்க்கும் பொழுதெல்லாம் ஒவ்வொரு மரத்திலும் கையில் பாசமேந்திய யமனைப் போல மரவுரியும் மான்தோலும் உடுத்த இராமனை நான் காண்கின்றேன். அதிக பயமுடைமையால், என்னைச் சுற்றி எப்பொழுதும் ஆயிரம் இராமர்கள் நிற்க நான் காண்கின்றேன். இக்காடு முழுவதும் இராமன் ஒருவனே இருக்கிறதாக எனக்குத் தோற்றுகிறது. இராமன் இல்லாத இடங்களிலும் அவனை நான் காண்கிறேன். தூக்கத்திலுங்கூட நான் இராமனைப் பற்றிக் கனவுகண்டு உளறிக்கொண்டு பிரக்ஞையற்றவனாகின்றேன். இராமனுக்கு நான் மிகவும் பயந்திருக்கிறபடியால் ரகாரத்தில் தொடங்கும் ரத்தினம், ரதம், என்ற பெயர்கள் கூட எனக்குப் பெரும் பயத்தை உண்டாக்குகின்றன. இராகவனுடைய வீரியத்தை நான் நன்றாக அறிவேன். நீ அவனுடன் யுத்தம்செய்வது சரியன்று. அவன் பலியையும் நமுசியையும் வதைக்கும் சக்தியுள்ளவன். ஓ ராவணா, நீ இராமனுடன் போர்புரிந்தாலும்சரி, போர் புரியாது விட்டாலுஞ் சரி, நான் பிழைத்திருக்கவேண்டுமென்றஎண்ணம் உனக்கிருந்தால், அவன் பெயரை என்முன் சொல்லாதே. இவ்வுலகத்தில் தருமத்தைச் செய்துவந்த சாதுக்கள் அநேகர் பிறர் குற்றங்களுக்காக மாண்டிருக்கிறார்கள். அவ்வாறு உன் குற்றத்துக்காக நான் மாளவேண்டிவரும். ஆகையால் நீ உன் இஷ்டப்படி செய்; நான் உனக்குத் துணைவரேன்"

என, அஞ்சுவதுமுண்டு அஞ்ச வருவதுமுண்டு என்பதையே சாற்றுவானாயினான். இப்பொழுது அவனுக்கு இருண்டனவெல்லாம் இராமனாகித் தோன்றுகின்றன.

இனிக் கம்பர் நூலினுள் மாரீசன் மாறுபட்டிருக்குந் தன்மையைக் காணலாம். இராகவனை இராவணன் வெல்லற் குரியனென மாரீசன் இங்கும் நினைத்தவனல்லன். ஆயினும் அவ்வெண்ணம் கடைநிலத்திற் கிடந்ததே என மதித்தவனாகி, முதலில் தன் மருகனுக்கு அறத்தின் மேன்மையைப் புகட்டித் தெருட்டுவானாகின்றான்.

அற்ற கரத்தோ டொன்றலை தீயே யனன்முன்றிற்
பற்றினை யுய்த்தாய் பற்பல காலம் பசிகூர
உற்றுயி ருள்ளே தேய வுலந்தா யுழையன்றோ
பெற்றனை செல்வம் பின்னை திகழ்ந்தாற் பெறலாமோ

[அறுக்கப்பட்ட உன் கைகளையும் தலைகளையும் நெருப்புடைய ஓமகுண்டத்தில் போட்டுப் போட்டு வேள்விகள் செய்தும், பலகாலம் பசியுடன் இருந்து உயிர் உள்ளே வாடும்படி வருந்தித் தவம் செய்தும், அதனாலல்லவோ எல்லாச் செல்வங்களும் பெற்றாய், பின்பு அதனை இழந்தால் மீண்டும் பெற முடியுமோ]

என்று மாரீசன் கேட்கின்ற கேள்விக்கு இராவணன் என்ன உத்தரம் கூறுவான்! தான் பெற்ற திருவெல்லாம் தவஞ்செய்து பெற்றானேயன்றி அவஞ்செய்து பெற்றானல்லன், திண்ணம். நல்லதன் நன்மையை இராவணனது சரித்திரத்தைக் கொண்டே அவனுக்கு எடுத்துக் காட்டுகின்றான். காட்டி,

திறத்திற னாலோ செய்தவ முற்றித் திருவுற்றாய்
மறத்திறனாலோ சொல்லுதி சொல்லாய் மறைவல்லோ
யறத்திற னாலே யெய்தினை யன்றோ வதுநீயும்
புறத்திற னாலே பின்னு மிழக்கப் புகுவாயோ.

[ஒவ்வொரு சொல்லாக ஆய்ந்து ஆய்ந்து கற்றிருக்கின்ற வேதங்களில் வல்லவனே, உனது வலிமையின் ஆற்றலாலோ, அல்லது அதர்ம வழியினாலோ, செய்தற்குரிய தவத்தைச் செய்து முடித்து எல்லாப் பாக்கியங்களையும் அடைந்தாய் சொல். இவ்விரண்டினாலும் அன்றே; மற்று, அறத்தின் வலியாலன்றோ எய்தினாய். எனின், இத்தனையும் உன் அனுபவத்தாலேயே அறிந்திருக்கின்ற நீயும் அச்செல்வங்களை, அதர்ம வழியில் பின்னும் இழந்துவிடப் புகலாமோ]

என மீண்டும் வற்புறுத்துகின்றனன். அறத்தினாற்றானே அத்தனையும் அடைந்திருப்பதறிந்தும் மறத்தினாற் சில இன்பம் தேடப் புகுவார் மதியினும் விதி சால வலியுடையதா யிருத்தல்வேண்டும்.

அறத்தால் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில

என்னுமத் திப்பியத் திருக்குறளினெதிரொலி மாரீசனது இவ்வாசகத்தில் கேட்கலாகின்றது. "அறத்தின்பாற்பட்ட தவத்தைச் செய்து, வேண்டிய வேண்டியாங்கு எய்திய இன்பம் நுகரும் நீயோ பிறன் மனை விழைந்தவொரு புறத்திறனில் புந்திவைத்து இன்பம் பெற நினைக்கின்றாய்" எனக் கழறுமிதனால் அரக்கனாயிருந்த மாரீசன் அளவிறந்த பெருமையடைந்தவனாகின்றான். அச்சத்தாலன்றித் தானும் அசையான் மற்றவரை அசைக்கவும் நினையான் என்னும் கீழ்மையிலேயே வான்மீக முனிவர் மாரீசனை வைத்திருக்க, கம்பர், தூய இராகவனால் சரங்கள் கொண்டேனும் தீண்டப்பெற்ற ஒருவன் உயர்தலை முறைமை என்னும் பண்புபற்றி அறன்வலி யுறுத்த வல்லவோர் நிலைமைவரையிலும் இவனைக் கொணர்ந்துவிட்டிருக்கின்றனர். இராமனது பாணிவில்லுமிழ்ந்த உண்டைகளை உண்டிருந்தும் செம்மையென்பது சிறிதும் சேராமையாற்றான் அம்மந்தரையைக் கம்பர், "துன்னருங் கொடுமனக் கூனி" என்று குறித்தனர் போலும். அந்தக் கூனியினும் மிக நல்லன் இவ்வரக்கன். ஆயினும் இவன் அரக்கனே யாதலின், இவனை உயர்த்திய உயரத்திற்கும் ஓரளவுவைத்தனர் கம்பர். "செய்தவமுற்றித் திருவுற்றாய்" என்ற இச்சொற்கள் இவனது அளவிற்கே தகும். "வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ, மீண்டு முயலப்படும்" என்ற அத் திருக்குறளின் எல்லையை இங்கு மாரீசன் எட்டி நிற்கின்றான். வேண்டிய வேண்டியாங்கு எய்துதற்கே தவம் செய்யப்படுதல் வேண்டும், என்னும் நினைவினால் இராவணற்குப் புத்தி புகல்கின்ற மாரீசன், செய்தவத்தின் தன்மையே தேர்ந்துரைத்த பான்மையால் வள்ளுவர் வகுத்த இலக்கணத்தின் வரையில் கம்பர் பெருமானால் உயர்த்தப்பெற்றிருக்கின்றா னென்பது தெரிகின்றது. அரக்கனொருவனையே இவ்வளவு மேன்மைக்கு உயர்த்திய புலவர், முனிவர்களை அதனினும் பெருமை அதிகமுறப் பேசவேண்டுமாதலின், அன்னவர்களை, "வேண்டின வேண்டியாங்களிக்கும் மெய்த்தவம் பூண்டவர்" என்று சாற்றிய செம்மை மனமாரச் சிந்திக்கத்தக்கது. தான் பாக்கியம் எய்தும்பொருட்டுச் செய்யுந்தவம் செய்தவமே யாக, பிறருக்குவேண்டியவைகளை எல்லாம் அளிக்கும்பொருட்டு முயலப்படும் தவமே மெய்த்தவமாவதன் சிறப்பிற்கு இணையாயவோர் சிந்தனை வேறெவ்வயின் காணல் கூடும்.

நவாலி அட்டகிரி அக்கரமாலை

காப்பு

குருவாய் வருமெண் கிரிவாழ் குமரன்
திருமார் பணியக் கரமா லைசெயப்
பெருவா தனைதீர்த் தருள்பே ழைவயிற்
றொருமா முகனா ரிருதா ளுறவே.

நூல்

அரனார் மகனே யறுமா முகபன்
னிருதோ ளொருவா விமையோர் முதல்வா
பரனா னபயோ ததியே பகவா
குருவாய் வருவா யருள்வாய் குகனே.

ஆகா வினையு மழியா மிடியும்
போகா விடரும் பொடிபட் டிடுமோ
வாகா முருகா வலிசேர் பனிரு
வாகா மயில்வா கனவா னவனே.

இகழ்வா கியதீ வினைவிட் டிரியத்
தகைசே ரிருதாள் நளினந் தருவாய்
குகனே குமரா குழகா வழகா
அகனே ரொளியே அருவா னவனே.

ஈயா தவர்பா லிரவா வரமும்
நோயால் மிடியால் நுணுகா வரமும்
மாயா வரமும் வருவாய் தருவாய்
சேயாய் நணியாய் சிவசண் முகனே.

உரையும் நினைவும் தொடரா வொருவா
தரையும் வெளியுந் தவிரா விறைவா
வரையும் பகையும் மலமும் வினையும்
திரையுங் கெடவேல் விடுசே வகனே.

ஊனா யுயிரா யுயிர்தோ ரறிவாய்
வானாய் நிலனாய் வளியா யொளியாய்
தேனா யமுதாய்ச் சிறிதாய்ப் பெரிதாய்க்
கோனாய் வருவா யருள்வாய் குகனே.

எந்தா யடியார்க் கெளியா யெரிமேல்
வந்தாய் குருவாய் வருவா யிமையோர்
தந்தா யருள்கூர் தாயா யிடரைச்
சிந்தாய் மறைதேர் சிவதே சிகனே.

ஏழா முலகுக் கிறைவா குவவுத்
தோளா துணைவா துயர்தீர் கமலத்
தாளா தலைவா தமியே னையுமுன்
ஆளா யாளா யறுமா முகனே.

ஐயா குமரா வழகா குழகா
பொய்யா வருளீ புனிதா பொருளார்
மெய்யா துயர்தீர் விமலா பனிரு
கையா கதிதா கருணா கரனே.

ஒன்றா யுடனா யொளியா யிருளாய்
அன்றா யுருவா யருவா யயலாய்
என்றாய் மதியா யெரியாய் விரிவாய்
நின்றா யெமையாள் நெடுவே லவனே.

ஓயா மிடியு மொழியா விடரும்
தேயா வினையுந் தீரா வகையென்
நேயா நிமலா நிலவா ருயிரைத்
தாயா யினிதாள் தணிகா சலனே.

ஔவைக் கருள்கூ ரயில்வே லரசே
கொவ்வைக் கனிவா யுமையாள் குமரா
பவ்வக் கடலுட் படியா தெனையுன்
கவ்வைக் கழல்வைத் தருள்கா வலனே.

கங்கைக் கொருவா கதிரைப் பதிவாழ்
சங்கப் புலவா தமியே னையுமாள்
கொங்கைக் குறமா தொடுகுஞ் சரிசேர்
பங்கப் பழனப் பழனிப் பரனே.

அங்கென் பதுவு மதுவென் பதுவு
மிங்கென் பதுவு மிதுவென் பதுமற்
றெங்கும் பரிபூ ரணமா மிறைவா
பொங்குங் கழல்தா பொருவே லவனே.

கந்தந் திகழும் தமிழுந் துறையும்
அந்தந் திகழு மருமா மறையும்
முந்தன் பொடுமம் முனிவர்க் கறையும்
செந்தில் மணியே யருள்சே வடியே.

ஞமனும் பலர்மே லிறையும் புரியும்
பவமும் முடிவும் பயிலா தருள்வாய்
சிவமுந் தெளிவுந் திருவும் புகழும்
தவமுந் தனமுந் தனிநா யகனே.

இடவொன் றமிலே னிரவொன் றுடையேன்
மடமொன் றகலேன் மனநோய் கெடுமோ
கடவுந் தனிமா மயிலிற் கதிதந்
திடவந் திடுவா யெழிலே ரகனே.

அணவும் மலமும் மதனுல் வினையின்
புணர்வும் புணர்விற் புகலும் வரலும்
தணவும் படியுன் தயைதந் தருளெண்
குணமும் மகிழ்வுங் குடிகொண் டவனே.

தந்தித் தனிமா முகனுக் கிளையாய்
புந்திக் கினியாய் பூதக் கிளையாய்
செந்திப் பதியாய் செருவுக் கிளையாய்
வந்திப் பொழுதாள் மயில்வா கனனே.

நந்தா வருடா நடமா மயிலா
குந்தா குமரா குறவா வறவா
எந்தா யிமையோர்க் கிறைவா மறவா
கந்தா வரமீ கருணா கரனே.

பரவும் மொழியும் பணியுங் கரமும்
இரவும் பகலும் நினையும் மனமும்
தரவுந் தருமோ தமிழுந் தொடையுங்
குரவும் மிலையுங் குருநா யகனே.

மருவா வசுரன் வரமுந் திருவும்
வெருவா விறலும் விடவேல் பணிசெய்
ஒருவா விருவர்க் கரியா யுடல்சேர்
இருவா தனைதீர்த் தெனையா ளுதியே.

அயனைச் சிறையிட் டரனுக் குரையிட்
டியுநற் கதிவா னவர்கட் குதவும்
செயலைத் தொடையாய் தெரியா யரியாய்
மயலைத் தொலையாய் மலைவாழ் பவனே.

அரவப் பகையா மணிமா மயிலும்
இரவைத் தெரிசீ ரெழிலார் கொடியும்
புரவைத் தருமற் புதவே லடியும்
பரவத் தருவாய் பவநா சகனே.

இலவந் தளிரே யிதழே விழியே
சலவுங் கயலே துடியே யிடையே
உலவும் மயிலே யெனல்விட் டுனையே
பலவும் புகழ்தா பரவும் வரமே.

பஞ்சப் புலனைந் தினவா வுமற
நெஞ்சத் திருணீங் கவுநீ ளறிவில்
தஞ்சத் தனியன் புதழைக் கவிரு
கஞ்சக் கழல்தா கதிர்வே லவனே.

அழகும் மணமு மழிபா வமுதும்
மழவுஞ் சிவமும் மருவும் முருகா
விழவும் பிறவும் விலகா வகைகொண்
டுளவெண் கிரிவா ளுபர்வா னவனே.

அளவும் முடியும் மடியும் மறியா
இளமுன் முருகா விருதாள் தருவாய்
துளவும் மணியுந் துயலுந் திணிதோள்
அழகன் மருகா வறுமா முகனே.

அறவா திருநல் லையில்வா ழமுதே
இறவா தருள்கந் தவனத் திறையே
நறவார் பொழிலெண் கிரிநா யகனே
மறவா வரமீ மயில்வா கனனே.

அனமும் நடையு மயிலும் விழியும்
இனமும் பொருவு மெழில்வா ரணமும்
புனமென் கொடியும் புணரும் புனிதா
தினமும் நினையுஞ் செயல்தந் தருளே.

அங்கா வறிவு மயரா வுளமும்
வெங்கா நெறியும் விமலா தருவாய்
செய்கா வளமுந் திகழெண் கிரிவாழ்
எங்கா விறைவா வெனையாள் பவனே.

———

பாவுக் கருளும் பரமா சரணம்
தேவர்க் கருளும் தேவே சரணம்
ஆவித் துணையே யமுதே சரணம்
சேவற் கொடியாய் சரணஞ் சரணம்.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள் :

பாதாமி லேகியம்	ரூ. 3-0-0
ரதிவல்லப லேகியம்	2-0-0
மஹா திராக்ஷாதி லேகியம்	2-0-0
குழந்தைகளுக்கு	
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை	0-4-0
பால சஞ்சீவினி	0-4-0
பால ஸுதா (டானிக்)	1-0-0

தைலங்கள்:

சந்தனாதி	6 அவுன்ஸ் ரூ.	1-0-0
அமிர்தாமலக	,,	0-12-0
பிருங்காமலக	,,	0-12-0
ஸ்திரீகளுக்கு		
ஸுதக டானிக்		2-0-0
கர்ப்பாசய டானிக்		2-0-0
ப்ரஸவ லேகியம்		1-8-0

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.

I.D.L. ச்யாவனப்ராசா I.D.L. பிருங்காமலக தைலம் கோரோஜனை மாத்திரை

நஞ்சன்கூடு பல்பொடி

சாதாரணம்-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. எ. மெடிகேடட் டப்பி

தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

I.D.L. ச்யாவனப்ராச. சிறந்த டானிக். சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு

மூலிகைசேர்ந்தசிற்றுமணக்கு எண்ணெ. காஸ்ட்ராலகஸ்,

ஜவரேக். ஜோல் எவ்வித ஜவரங்களுக்கும்

[பஸ்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்ஸுடன் ஆர்டர் செய்யவும்.]

அறிக்கை:—கலா நிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.

கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

தலையங்கங்கள்:— அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச் சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினல் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார்திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

குறுந்தொகை:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச் சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளை யறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

இலஞ்சிப்பாவை:—(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெண்ணப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பாடம்:—வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

நம்மாழ்வார் வைபவம்:—(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ப்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

1931-வது வருடம் 4-வது வால்யூம்.

தலையங்கம்:—அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையின் மருமை 4 மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

கம்பராமாயணம்:—(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

சூளாமணி:—(K. இராமரத்நம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

யாப்பிலக்கணம்:—உறுப்பியலும், செய்யுளியலில பாக்களின் இலக்கணமும்.

அப்பர்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

ஆண்டாள்:—(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

மானத சாத்திரம்:—(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

பிஸாரோ நாடகம்:—ஆங்கிலப்புலவர் R. B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

நவராத்திரி நாடகம்:—(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

சிதம்பரதேவர் சரிதம்:—(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட மேவார் நாவல்.

களவியற் காரிகை:—(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

கந்தபுராணமும் சங்க நூல்களும்:—(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணுக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்ரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.

எமது புதிய பிரசுரங்கள்

சோவியத் ருஷியா.

இது பண்டிதர் ஜவஹரிலால் அவர்கள் எழுதிய ஆங்கில நூலின் தமிழ்மொழி பெயர்ப்பு. ஏழை, பணக்காரன், ஆள்பவன், ஆளப்படுபவன், ஆண் பெண் என்னும் ஏற்றத்தாழ் வில்லாதபடி, குடிவாழ்க்கை ருஷியாவில் அமைக்கப்பெற்றுளதெனக் கூறப்படும் தற்கால ருஷியசரித்திரமாகும் இது. விலை ரூ. 1-4-0. தபால் செலவு வேறு.

இராட்டூர் வீரன் துர்க்காதாஸ்.

வங்காளக் கவி பாபு துவிஜேந்திரலால் எழுதிய நாடகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பு. இராஜபுத்திரர் வீரத்தையும், அவர்களது இராஜ விசுவாசத்தையும் இந் நாடகம் புலனாக்குகின்றது. விலை ரூ. 1-4-0. தபால் செலவு வேறு.

சுப்பிரமணிய பாரதியார்.

தமிழ் நாட்டின் தேசியக் கவி என்று கொண்டாடப் பெறும் ஸ்ரீமான் பாரதியாரின் நூல் ஆராய்ச்சியாகும் இது. விலை ரூ. 1-0-0. தபால் செலவு வேறு.

கிடைக்குமிடம்:—

பாரதி புத்தகாலயம்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

திரு அருட்பா

பி. ஏ., எம். எல்., அட்வொகேட்,

ஆ. பாலகிருஷ்ண பிள்ளை பதிப்பு

ஒன்றே

சுவாமிகள் கை எழுத்தைக்கொண்டு அச்சிட்டது!

ஆகையால், பிழை முதலிய விபரீதங்கள் இல்லாததும் நூதன விஷயங்கள் எல்லாம் கொண்டதும் இப்பதிப்பே!!

ஏற்ற பெற்றி பாகுபாடு செய்யப்பட்டு, அரிய ஆராய்ச்சிக் குறிப்புக்களோடு விளங்கும் இப் பதிப்பின் பகுதிகள் அடக்க விலையில் கிடைக்கும்!!!

6-வது தனிப் பாசுரப் பகுதி

(பல மத ஸ்தோத்திரங்கள்-தபால் செலவோடு 6 அணா அனுப்புதல் வேண்டும்.)

ANCIENT JAFFNA

Mudaliar C. Rasanayagam C. C. S.

An anthentic history of Jaffna based on archeological, Epigraphic and Linguistic researches.

Rs. 5 8 0 Postage extra.

KALANILAYAM

Vellala Street, Purasawalkam, Madras.

சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

தமிழகராதி ஆதார நூற்றொகுதி

நாம தீப நிகண்டு.

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.

விலை ரூபா **2-0-0**

அரும்பொருள் விளக்க நிகண்டு.

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல்லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா **1-4-0**

கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா **0-6-0**

திருக்குறள்

மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்

(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக் குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணாக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணா **0-12-0**

களவியற் காரிகை.

ஒரு சிறந்த அகப்பொருளிலக்கணநூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களை யுடையது தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **3-0-0**

நூற்பொருட் குறிப்பு.

1. இறையனார் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது, டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிகஇன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா **10-0-0**

இராஜசுந்தரம்.

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா **0-8-0**

தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B. A., B. L.,

விலை அணா **0-6-0**

கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.

வர்த்தமானம்

ஞாயிறு:—யாழ்பாணம் கலாநிலையக் கழகத்தார் வெளியிடும் ஞாயிறு என்னும் தமிழ் இலக்கிய வெளியீடு வரப்பெற்றோம். இது இரண்டு மாதத்திற்கொரு முறை வெளி வருவது. வருட சந்தா ரூ 4. ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவுருவைப்பற்றிய குறிப்பு, பருவவர்ணனை, வங்கத்துதித்த செங்கதிர் வேந்தர், சகுந்தலைவெண்பா, பெருங்காப்பிய ஆராய்ச்சி, தொன்மை என்னும்சொல்வரலாறு, பரஞ்சோதியாரின் பாடல்திறம், பாரவி என்னும் வடமொழிப் புலவர், மணியனைய தமிழ்ச்சொற்கள், தொல்காப்பியம் எழுத்ததிகாரம், அன்பினில் இன்பு, சாங்கிய தத்துவ ஆராய்ச்சி, தமிழகத்தில் தர்க்கநூல் வளர்ச்சி, ஆரிய சக்ரவர்த்திகள், முருகன் வரலாறு ஆதிய கட்டுரைகள் இம் முதல் வெளியீட்டில் காணப்படுகின்றன. அறிஞர்பலர் மேற்பார்வையில் இது நடைபெறுகின்றபடியால், இது செவ்விய முறையில் நடைபெறும் என்பதற்கையமில்லை. வேண்டுவோர் ஞாயிறு பிரசுராலயம் யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

***

கனவில் தோன்றிய கடவுள்:—நெல்லூர் ஜில்லாவில் ஏரசேவா என்ற ஒரு கிராமத்தில் கிராம முன்சீப்பாயிருந்த கொல்லூரு சின்னசாமி ரெட்டியார் என்பவர் சிறந்த விஷ்ணுபக்தர். அவர் சென்ற அனந்த சதுர்த்தியன்று ஒரு கனவுகண்டார். அவர் கனவில் மஹாவிஷ்ணு தோன்றித் தமது விக்ரகம் ஒன்று ஊர் ஏரிக்கருகே பூமியில் புதைந்துகிடக்கின்றதென்று திருவாய் மலர்ந்தருளினாராம். உடனே சின்னசாமி ரெட்டியார் துயிலெழுந்து விஷயத்தைக் கிராம வாசிகளுக்குக் கூறினாராம். பொழுதுவிடிந்ததும் அவர் அக் கிராமவாசிகளுடன் ஏரிகரைக்குச் சென்றுதோண்டிப்பார்க்க, அங்கு 10 அடி உயரமுள்ள மஹாவிஷ்ணுவின் விக்ரகம் அகப்பட்டது. அதை எடுத்து ஓரிடத்தில் வைத்துக் கிராமவாசிகள் பூசைசெய்து வருகின்றனராம். விக்ரஹம் இருந்த விடத்தைச் சுற்றி ஒரு ஏகர் நிலத்தை அவ்வூர் தாசில்தார் கோயில் கட்டுவதற்கு அளித்திருக்கின்றாராம். ஸ்வாமி அனந்தபத்மநாபன் என்ற பெயரிடப்பெற்றுளது என்று ஒரு செய்தி கூறுகின்றது.

***

மெக்காவிற்கு ரயில்:—மெக்கா என்னும் மகமதியர்களின் புண்ணிய ஸ்தலத்திற்குச் செல்பவர்கள் இதுவரைக் கால்நடையாகவே செல்லவேண்டி யிருந்தது. சென்னையிலுள்ள காதர் யூசப் என்னும் கடியாரக் கம்பெனியார் மெக்காவிற்கு இரயில்போடும் விஷயமாய் முயன்று வருகின்றார் என்றும், சீக்கிரத்தில் வேலை யாரம்பமாகும் என்றும் தெரிகின்றது.

***

இந்து முஸ்லீம் ஒற்றுமை:—மைசூர் இராஜ்யத்தில் சிக்மகல்லூர் என்னுமிடத்தில் இந்துக்கள் ஒரு பிள்ளையார் கோயிலைக் கட்டுகின்றனர். அக்கோயிலுக்கு அஸ்திவாரக்கல் மைசூர் திவானான ஸர். மிர்சா இஸ்மாயில் என்பவரால் நாட்டப்பெற்றதாம். அவர் அஸ்திவாரக்கல்லை நாட்டுகையில் இந்துமுஸ்லீம் ஒற்றுமையை வற்புறுத்திப் பேசினாராம்.

மற்றோர் யுத்தம்:—சமீபத்தில் அமெரிக்காவிலிருந்து திரும்பிய டாக்டர் கஸ்வின்ஸ் கூறுவதாவது:—எங்கும் அமைதியின்மையும், வறுமையும் காணப்படுகின்றன. அமெரிக்காவில் வேலையில்லாமை அதிகரித்துக்கொண்டே வருகின்றது. அரசாங்கத்தின் போக்கும், ஜனங்களின் மனநிலையும், அரசியல்வாதிகளின் முறையும் நோக்குங்கால் சீக்கிரத்தில் ஒரு பெரிய யுத்தம் ஏற்படுமென்றே தோன்றுகின்றது. சர்வதேச சங்கத்தில் உலக சமாதானப் பேச்சும் ஆயுதப் பரிஹரண முயற்சியும் வளரவளர நாடுகள் ஒன்றின்மேல் ஒன்று சந்தேகங்கொண்டு காரியங்களை நிகழ்த்துகின்றன. அடுத்த யுத்தத்தில் ஐரோப்பா முழுதும் தலையிடும். என்று தோன்றுகின்றது. எங்கும் பிரிவினை உணர்ச்சியே அதிகரித்துவருகின்றது—என்று அவர் வருந்துகின்றார்.

***

பட்டதாரிக்குத் தோட்டிவேலை:—ஆக்ஸ்பர்ட் கலாசாலைப் பட்டம்பெற்ற கோஸ்வாமி என்பவர் டில்லி முனிசிபாலிட்டியில் தோட்டிவேலை புரிந்துவருகின்றாராம். அவர் சமீபத்தில் கூறிய அவரது சரிதம் வருமாறு:—நான் மத்திய வகுப்பைச் சேர்ந்தவன். நான் சிறுவனாயிருந்தபொழுது என் தகப்பனார் காலமானார். என் தகப்பனார் வைத்திருந்தபணத்தைக்கொண்டு நான்படித்தேன். என்தாயார் நான் ஐ. சி. எஸ். பரிக்ஷையில் தேறவேண்டுமென்று விரும்பி என்னைச் சீமைக்கு அனுப்பினார். என் தாயாரின் எண்ணம் நிறைவேறவில்லை. ஆனால் ஆக்ஸ் போர்ட் கல்லூரியில் பி. ஏ. பட்டம் பெற்றேன். பிறகு பாலஸ்தீனத்தில் சிறிதுகாலம் பத்திரிகை நிருபராக வேலைசெய்தேன், அதைவிடுத்து நான் இந்தியா திரும்பினேன். இந்தியாவில் வேலையில்லாமையின் கொடுமையைக் கண்டு, பம்பாயில் செருப்புத் தொழிற் சாலையில் வர்ணம் பூசும் தொழிலில் அமர்ந்தேன். தினம் ஒன்றிற்கு 1ரூபாய் சம்பளம் கிடைத்தது. சிறிது காலம் அங்கே வேலைசெய்து பின் டில்லிக்குச் சென்றேன். சிறிது காலம் வரையில் எனக்கு ஒரு வேலையும் அகப்படவில்லை. பிறகு டில்லி முனிசிபாலிட்டியில் தோட்டி வேலையில் அமர்ந்தேன். இப்பொழுது எனக்கு மாதம் ஒன்றிற்கு ரூ 13-சம்பளம். நான் தினம் ஒரு அணாவிற்கு ஹிந்துஸ்தான் டைம்ஸ் பத்திரிகை வாங்குவேன். மிகுந்துள்ள ரூபாயை வைத்துக் கொண்டு நான் எளிய வாழ்க்கை நடத்தி வருகின்றேன். மற்றத் தோட்டிகள் இப்பொழுது என்னிடம் அன்புடன் பழகுகின்றனர்: தோட்டிப்பிள்ளைகளுக்கு இலவசமாய்க் கல்வி கற்பித்தும் வருகின்றேன். இந்த எளிய வேலையை மேற்கொண்டதற்கு இப்பொழுது நான் வருந்தவில்லை, எளியவர்களுக்குத் தொண்டுபுரியவேண்டுமெனின், நாமும் அவர்களோடு கலந்துவாழ்தல் அவசியமாகும். இனி என் வாழ்நாட்களை ஏழைகளின் முன்னேற்றத்தில் செலவிடுவேன்.

***

ஸ்ரீ சரோஜனி தேவி:—உப்புச் சத்தியாக்கிரஹ இயக்கத்தை நடத்தியதற்காகவும் வேறு சில குற்றத்திற்காகவும் சிறையிலிடப்பெற்ற ஸ்ரீ சரோஜனிதேவி சென்றவாரம் விடுதலை யடைந்தார்.

KALANILAYAM
Reg. No. M. 2324.

— கம்ப ராமாயணம் —

பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.
ஆசியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

பால காண்டம்	ரூ.	5	0	0
அயோத்தியா காண்டம்	,,	5	0	0
ஆரணிய காண்டம்	,,	4	0	0
கிட்கிந்தா காண்டம்	,,	4	8	0
சுந்தர காண்டம்	,,	5	0	0
யுத்த காண்டம்—2 பாகம்	,,	10	0	0

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர் :— கலா நிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.

தேகபலம், ஞாபகசக்தி, உற்சாகம், ஊக்கம், சுக சம்பத்து இவைகளைக் கொடுப்பதில் எங்கள் பிரசித்திபெற்ற

ஆதங்க நிக்ரஹ மாத்ரைகள்

பலவிருத்தி ஔஷதங்களுக்கெல்லாம் முன்னணியில் நிற்கின்றன. இலட்சக் கணக்கான ஜனங்கள் (சென்ற 53 வருஷங்களாக) உபயோகித்து குணமென்னும் பாக்கியத்தை அடைந்திருக்கிறார்கள். நீங்களும் ஒரு டப்பியை உபயோகித்துக் குணத்தை அறியுங்கள்.

32 மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1 0 0
5 டப்பிகள் ரூ. 4 0 0

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.

ஆறெழுத்தந்தாதி:—அகத்திய முனிவர் அருளிச் செய்த இவ் வாறெழுத்தந்தாதி முருகக் கடவுளை முழுமுதற் கடவுளாக உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷர மந்திரத்தின் வைபவத்தைத் தன்னுள் அடக்கியதென்று கருதப்படுகின்ற 100 செய்யுள்களைக் கொண்ட நூல். இது டாக்டர் V. S. அருணாசலம் பிள்ளையவர்களின் உரையோடு பதிப்பிக்கப் பெற்றது. விலை அணா 12. தபால் செலவு வேறு.

பெருமாள் திருமொழி:—(குலசேகராழ்வார் திருவாய் மலர்ந்தது.) ஸ்ரீமான் பு. ப. இரத்தின சபாபதி நாயகர் அவர்கள் இயற்றிய பதவுரை, இலக்கணக் குறிப்பு சரித்திர ஆராய்ச்சி முதலியவைகளுடன் சேர்ந்தது. நாலாயிரப் பிரபந்தம் பயில விரும்புவோர்க்கு இது மிகுந்த உதவி தரும். விலை:-கலிகோ 1-4-0, சாதா 1-0-0. தபால் செலவு வேறு.

கலா நிலயம்
வேளாளர் தெரு, புரசைபாக்கம், சென்னை.

NATIONAL INSURANCE COMPANY, LIMITED.
Head Office :
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

New Business Completed During 1932 ... ... Rs. 1,55,66,720
Out of a business of ... Rs. 1,96,70,000 received in proposals.

Life Assurance is security— for the policyholder from an investment point of view. / for the policyholder and after him for his wife and children.

Claims paid over ... Rs. 1,00,00,000
Total Assets exceed ... Rs. 1,90,00,000

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

FIRE & ACCIDENT RISKS
covered by
NATIONAL FIRE
AND
GENERAL INSURANCE COMPANY Ltd.,
NATIONAL INSURANCE BUILDING,
7, Council House Street, Calcutta.

For Terms & Conditions apply to:—
T. ANANTACHARI, Branch Secretary, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor).